இதழ்-49

01.07.2022

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# அத்தியாவசியமற்றதா ஆகாரம்?

ஆசிரியர் பதிவு

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறது. இது என்றோ ஆரம்பித்து விட்ட ஒன்று என்றாலும் இன்றுவரை இதற்கான தீர்வொன்றைக் கண்டோமா என்றால் இல்லை என்பதே பதிலாகிறது.

இந்த நிலமைக்கு காரணம் என்ன? கண்டபடி கடன் வாங்கியது. அந்த தவறை மறந்து, இன்றும் இந்த பிரச்சனைக்கு தற்காலிக தீர்வாக கடன்களை மேலும் பெறுவதற்காக ஓடித்திரிகிறோமே தவிர வேறு எதையுமே நாம் செய்ததாக தெரியவில்லை.

வருமானம் குறைந்த வீட்டில் செலவுகள் குறைத்து கடுமையாக உழைத்துத்தான் முன்னறுவார்கள். ஆனால் இங்கே எவரையும் கடுமையாக உழையுங்கள் என்று சொல்வதாய் தெரியவில்லை. அலுவலகம் வந்தால் செலவு. ஆக, வீட்டிலேயே இருங்கள் என்கிறோம்.

எரிபொருட்கள் இல்லாமல் போய்விட்டது. இந்த நேரத்தில் துவிச்சக்கர வண்டி இறக்குமதியிலும் பல தடைகள் விதிக்கப்பட்டு துவிச்சக்கர வண்டிக்கும் பயங்கர தட்டுப்பாடு. விலையும் பலமடங்கு உயர்ந்துவிட்டது. துவிச்சக்கர வண்டிகள் நியாயமான விலைக்கு கிடைப்பதையாவது அரசுகள் உறுதி செய்தால் எரிபொருளுக்கான வரிசை குறையாமலா போகும்?

பாலைவன தேசங்களும், பாறைகளின் தேசங்களும், பனி படரும் தேசங்களும் தன்னிறைவு கண்ட நேரத்தில் இயற்கை ஆசீர்வதித்து வைத்துள்ள இந்த தீவில் வளமான மண்ணும், அதற்கேற்ற பருவநிலையும் கொண்ட சூழல் உள்ளது. மீன்பிடியில் உச்சம் காண நான்கு புறமும் கடல் உள்ளது. இருந்தும் விவசாய மீன்பிடியை மறந்து அவற்றை முன்னேற்ற எதுவித நடவடிக்கைகளும் இன்றுவரை இல்லை. அவர்களுக்கான எரிபொருளையாவது கிடைக்கச்செய்ய வேண்டாமா? முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளும் உரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு எஞ்சியதே அத்தியாவசிய தேவைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். பஞ்சத்தினால் வரும் பசி அதனிலும் பயங்கரமானது என்பதை பட்டுத்தான் உணரப்போகிறோமா?

நாளை என்றொன்று வருவதற்கு விவசாயிகள் முக்கியமானவர்கள். எனவே, தாமதிக்கும் கணமெல்லாம் பெரும் பஞ்சம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறது துமி!

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 நிலவின் விலை ஏன் கூடவில்லை?
08 கனகராயன் ஆறே பாய்ந்திடு
09 முகக்கவசம் அணிந்த மோனாலிசா
16 இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது - திரு. இ.இரமணன்
20 அடங்காப்பறவை நூல் எப்படி?
25 சங்கமம்
26 ஈழச்சூழலியல்
30 சித்திராங்கதா
36 ஒரு நடுவரின் வாக்குமூலம்





# நிலவின் விலை ஏன் கூடவில்லை?

எரிபொருள் இல்லாமல் இரவில் நிலா மட்டும் எப்படி இலவசமாக வெளிச்சத்தை தர முடியும்? நிலவின் விலையும் இனி கூட வாய்ப்புண்டா? அல்லது நிலவொளியை பங்கிட்டு வழங்கமுடியுமா? முழுமையாக நிலவை அனுபவிக்க பயமாக இருக்கிறது. பிறகு நிலவிற்கும் தட்டுப்பாடு வந்தால் யாரிடம் போய் பிச்சை கேட்பது?

ஆகையால் நிலவையும் இப்போதிருந்தே சிக்கனமாக பயன்படுத்த பழகிக் கொள்ள வேண்டும். தேய்ந்து செல்கின்ற நிலா மீண்டும் வளராமல் போய்விடுகின்ற அதிசயமும் இங்கு நடக்கலாம். அப்படி நடந்தால் என்ன செய்வது?

நிலவு ஏன் எல்லாருக்கும் சமனாக ஒளி வழங்குகிறது. நிலவுக்கு தெரிந்தவர்கள் என்று இங்கு யாரும் இல்லையா?

நிலவு நீண்ட தொலைவில் இருப்பதால்தான் அது வரும் வழியை யாரும் வழி மறிக்க முடியவில்லையோ?

இன்றைய நீண்ட இரவுகளில் வரிசைகளில் காத்திருக்கும் ஒருவனிற்கு இப்படியான சந்தேகங்கள் வந்தன.

நிமிர்ந்து நிலவைப்பார்த்தான். தேய்ந்து தேய்ந்து ஒரு சொட்டு தான் மிச்சம் இருந்தது. ஒரு வளைந்த கோடு மட்டும் தான் தெரிந்தது. நாளைக்கு இந்த கோடும் இல்லாமல் போகலாம்.

நிலவிற்கு தட்டுப்பாடு வந்தால் என்ன செய்வது? ஒரே வழி .. இப்போதே முடிந்தவரை நிலவை பதுக்கியாக வேண்டும். வரிசையில் வாகனத்தை நிறுத்திவிட்டு கால்நடையாக வீட்டை நோக்கி ஓடினான்.



வீட்டின் ஓடுகளை அவசரமாக கழட்டினான். நிலவொளியை முடிந்தவரை பதுக்கி வைக்க வழி செய்தான்.

நீங்கள் அட்டையில் பார்க்கும் இந்தக் காட்சியை நேரில் பார்த்துக் கொண்டிருந்த அயல்வீட்டார் ஒருவர் சிரித்தார்.

“என்ன தம்பி முட்டாள் தனமா வேலை செய்யிறா?” என்றார்.

“ஓமோம்.. இப்ப எல்லாம் முட்டாள் தனமா தான் தெரியும். இன்னும் கொஞ்ச நாள்ல விளங்கும்.” என்றான் அவன்.

அயல்வீட்டுக்காரருக்கும் ஏதோ ஒரு ஐமிச்சம் வந்தது.

எதுக்கும் செய்து வைப்போம் என்று தன் வீட்டு ஓட்டையும் அவசரமாக மேலேறி கழட்டி வைத்தார்.

இந்த சம்பவம் வேடிக்கையாக தெரிகிறதா? அல்லது நீங்களும் நானும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வின் விம்பமாக தெரிகிறதா?

நிலவிற்கு உண்மையிலேயே தட்டுப்பாடு வருமா?

எரிவதால் தான் வெளிச்சத்தை உருவாக்க முடியும். கதிரவன் தொடக்கம் மெழுகுதிரி வரை தன்னை எரித்துத்தான் எமக்கு வெளிச்சத்தை தருகின்றனர்.

ஆனால் இந்த நிலவு மட்டும் தன்னை எரித்து வருத்திக் கொள்ளாமல் ஒளியை கடன் வாங்கி எமக்கு தருகிறது.

நிலா இரவில் வருவதாய் நினைத்தோம். இல்லை அது இரவலில் தான் வருகிறது.

இரவல் வாழ்வின் படிமம் நிலவில் பார்த்தால் தெரியும். வளர்கிறது. தேய்கிறது. ஒருநாள் இல்லாமலே போய் விடுகிறது. பின் மீண்டும் வளரத் தொடங்குகிறது. வளர்ந்த பின் தேய தொடங்கிறது. நிலவால் இதற்கு மேல் இனி வளரவும் முடியாது. வளர்ந்த பின் தேயாமல் இருக்கவும் முடியாது. ஏனெனில் நிலவின் வாழ்வு நிலவின் கைகளில் இல்லை. ஒளி கொடுக்கின்ற கதிரவன் கைகளிலும் ஈர்த்து வைத்துள்ள பூமியின் கைகளிலும் தான் இருக்கிறது.

நிலவின் இரவல் வாழ்க்கை தான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது... அதிலும் இது தேய்பிறைக்காலம். இதற்கு மேலும் தேய்பிறைக்காலம் நீளும். ஆனால் என்ன ஒரு ஆறுதல் என்றால் அதுவும் நிரந்தரமானதல்ல. வளர்பிறைக்காலம் என்ற ஒன்று நிச்சயம் வரும். ஆனால் இரவல் வாழ்வு தொடரும் வரை தேய்பிறைக்காலம் மீண்டும் வருவதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. சொன்னாலும் இனி ஒருவர் கூட இங்கு நம்பமாட்டார்கள்.

“அப்படியென்றால் இந்த இரவல் வாழ்வின் மீட்சிக்காலம் எப்போதுதான் வரும்?” இந்தக் கேள்வி தான் எல்லோருக்கும்

உள்ளது. இந்த கேள்விக்கான பதில் தேய்பிறைக்காலத்திலும் சொகுசு வாழ்வு வாழும் தலைவர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் என்று இன்னும் நம்புவதே எம் முட்டாள் தனமாகும். இந்த பேரல்லலில் சிக்குண்டு தவிக்கும் உங்களைப்போல் என்னைப்போல் ஒரு சாதாரண குடிமகனாலே இந்த கேள்விக்கான பதில் உருவாக முடியும்.

**‘என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?’**

என்கிற தேசபக்திப்பாடல் இப்போது தேசவிரோதப்பாடல் ஆகிவிட்டது. கையேந்தினால் மட்டுமே வாழ்வு என்கிற அவலநிலையில் வந்து நிற்கிறது நாடு.
முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி என சிறு தீவிற்குள்ளே அனைத்தையும் அள்ளித் தந்திருக்கிறது இயற்கை. ஆனால் வைத்து வாழும் வழி அறியாமல் இன்னும் நாம் கையேந்தி நிற்கிறோம்.

**‘இந்து சமுத்திரத்தின் முத்து’** என்று செல்வப்பெயர் சூட்டி அழைக்கப்பட்ட தீவின் இன்றைய நிலை ஏன் இப்படி ஆகவேண்டும்?

இத்தனை ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட நாட்டில் மக்களை இங்ஙனம் பொருளாதாரம் நெருக்கியதாய் அறிந்தோமோ? அப்படி இதுவரை நடக்காத நாட்டில் இப்போது பொருளும் இல்லாமல் அதற்கான ஆதாரமும் இல்லாமல் பொருளாதாரம் இப்படி சீர்கெட்டுப் போக காரணம் என்ன?

ஆட்சியாளர்களை குற்றம் சொல்வீர்கள். உண்மைதான். அதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் முன் சொன்னது போல் மாற்றம் என்பது அவர்களிடமிருந்து கிடையாது. அது நம்மில் தான் முளைக்க வேண்டும்.

இந்த நிலை மாற வேண்டின் என்ன செய்ய வேண்டும்? நீர் வளம், நில வளம் மிக்க இந்த நாட்டில் முறையான கல்வியில் தெளிவான வல்லுனர்கள் முளைத்தெழ வேண்டும். கற்றறிந்த மேதாவிகளில் கைகளில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அனுபவத்தால் வென்றவர்களை நாடு முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆள்பவர்களை நம்பாது தன் சார்ந்து வாழும் தலைமுறை உருவாக வேண்டும். உழைத்து சேர்த்த மூலதனங்கள் நாட்டிற்குள்ளே பயிரிடப்பட வேண்டும். மண்ணை நம்பிய வாழ்வில் ஒரு பசுமைப்புரட்சி வேண்டும். கடலை நம்பிய வாழ்வில் ஒரு நீலப்புரட்சி வேண்டும். கால் நடைப்பண்ணைகளின் பாலில் ஒரு வெண்மைப்புரட்சி வேண்டும்.

மேற்கத்தைய நாடுகள் முன்னர் இந்த சவாலை முட்டி மோதி துரத்தியது போல் பாரிய அளவில் கைத்தொழில் புரட்சிகள் இந்தச் சிறுதீவிலும் உண்டாகவேண்டும். அது ஒன்றே இந்த இரவல் வாழ்வின் விடுதலைக்கான நிரந்தர வழியாகும்.

கேட்கிறது. உங்கள் உள்ளக்குமுறல் கேட்கிறது. வீட்டை காக்கவே

பெருந்திண்டாட்மான இந்த சமயம் நாட்டை காக்கும் எண்ணம் யாருக்கு வரும் என்கிறீர்களா? உண்மைதான். இரவல் வாழ்விலிருந்து ஒரு நிரந்தர தீர்வை நோக்கி முன்னோர தற்சமயம் எம்மால் இயலாது என்பது சத்தியமே.

ஆனால் இந்த தேய்பிறைக்கால முடிவில் மீண்டும் ஒரு வளர்பிறைத் தோற்றப்பொலிவு தென்படுமே. அந்த சமயம் புதிதாய் முளைத்தெழ தயாராக இருங்கள் என்கிறேன். அன்றி அந்தத் தோற்றப் பொலிவில் மயங்கி இரவல் வாழ்வின் எதார்த்தங்களை மீண்டும் மறக்க தொடங்கி விடுவோமாயின் எம் சந்ததிக்கான தேய்பிறைக்காலம் இன்னும் அதிக ரணமானது என்பதை நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

## விந்தை செய்திகள்

1. உலகின் மிகப் பெரிய ஆற்று மீன் கம்போடியாவில் சிக்கியுள்ளது. ஸ்டிங்ரே எனும் பிரமாண்ட திருக்கை மீனான இது 13 அடி நீளமும் 300 கிலோ எடையும் கொண்டதாக உள்ளது. இதற்கு முன் 2005 இல் தாய்லாந்தில் கிடைத்த 293 கிலோ எடை கொண்ட கெழுத்தி மீனே இந்த சாதனையை கொண்டிருந்தது.



2. அமெரிக்காவில் வாழும் ஜெசி ஒயிட். இவர் 1939-ல், பிரிட்டனின் இருந்தபோது அங்குள்ள கல்லூரி ஒன்றில் பட்டப் படிப்பை முடித்தார். ஆனால் பட்டத்தைப் பெறுவதற்கான கட்டணத்தைச் செலுத்த முடியாததால் அவரால் பட்டம் வாங்க முடியாமல் போய்விட்டது. காலங்கள் ஓடிவிட்டன. ஒன்றிரண்டு ஆண்டுகள் அல்ல, 75ஆண்டுகள். இப்போது அவருக்குத் திடீரெனப் பட்ட படிப்பைப் பூர்த்திசெய்ய வேண்டும் எனத் தோன்றியுள்ளது. இதை அறிந்த அவரது நண்பர் டோனா கில்பர்ட், கட்டணம் செலுத்தி பட்டம் பெற ஏற்பாடு செய்தார். 75 ஆண்டுகளுக்குப் பிறகு, 96 வயது அமெரிக்கப் பாட்டி பட்டம் பெற்றுள்ளார்.

# கனகராயன் ஆறே பாய்ந்திடு

என்.நிலவிந்தன்

மருங்கி வளர்ந்த மதுரை மர
நிழல்களின் கீழே ஓடுகிற ஈழநதி
வன்னிக்குள்ளே மகாவலி
கங்கை போல ~மண்ணுக்குள்ளே
நம் நிலத்தின் சாட்சி


கூச்சல் போட்டுத் தாவும் குரங்குகள்
வரால் கெழுத்தி பெட்டியன்
செறிந்த ஆற்றுக்குள்
குஞ்சுகள் பொரிக்க இவற்றுக்கு
செல்கோதுகள் வாழிடம் வகுத்தன

பல ஊர்கள் கடந்து
காடுகள் கடந்து முட்டி மோதி
இரத்தக்கறை கழுவிய புண்ணிய நதியே
பண்டார வன்னியனார் காலத்து
நம் நாகரிகத் தடயமும் ~ நின்
கொண்டு இரணைமடு வரை நீள்கிறது

போர் ஓய்ந்த தாய்நிலத்தில்
அழுகை தீர்ந்த நிமிர்ந்த பாய்ச்சலாய்
சல சல வென்று ஓசையும்
பாடிக் கொண்டு ஓடிடும்
நாணம் செறிந்த பெண்களும் நதியில்
சென்று குளித்திட
காற்றாய் நெஞ்சில் இன்புறும்
கீற்றாய் கனதிப் பொழுதுகள்

யாரோ உன்னை கிளருவார்
கொடுங் கோளர்கள் நிறைந்து
புடைசூழ்ந்திடும் ஞானும் எந்தை நிலங்களும்
சாபம் கொண்டு வருகிறோம்
சாட்சி சொல்ல மீத்திரு
கனகராயன் ஆறே பாய்ந்திடு!!

கிஷோர்த்தனா சிவானந்தா
தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம்
சீதுவை



# முகக்கவசம் அணிந்த மோனாலிசா

“டேய்..”

”…”

”டேய் நிதன், பஸ்ல நேரத்தோட சீட்ட புக் பண்ணிட்டா தானே?”

”ஓம் மா.. பண்ணிட்டன்..”

”அப்பா மேசையில வச்ச காச எடுத்திட்டியா?”

“…”

“டேய்.. நான் கேக்குறது காதுல விழுதா இல்லையா..?”

“ஐயோ அம்மா, ஓம் மா.. எடுத்துட்டன்”

“சரி, இந்தாடா தண்ணி போத்தலயும் இந்த பிஸ்கட் பக்கட் சாமானுகளையும் பாக்குல எடுத்து வை, விடியச்சாமம் கொழும்புல போய் இறங்குனதும் பசிக்கும்..”

“…”

“நிதன்.. என்ன நினைப்புலடா இருக்கா.. நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கன்.. நீ பாட்டுக்கு என்னமோ யோசிச்சிட்டு இருக்க..!”

“..ஐயோ ஐயோ அம்மா, அதெல்லாம் ஒண்ணுமில்லமா..”

“என்னமோ.. கொழும்பில போய் இறங்கின உடனே அம்மாக்கு கோல் ஒண்டு அடி சரியா..?”

தாயும் பிள்ளையும் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த கமலநாதனுக்கு மனதில் தோன்றியதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“தேவி, அவன் என்ன கொழும்புக்கு முதல் தடைவையாவா போறான்! அந்த பாங்கு வேலைல சேந்ததுல இருந்து லீவுல வீட்டுக்கு வந்து பொயிட்டுதானே இருக்கான்! என்னமோ இன்னைக்குதான் புதுசா போற போல பேசிட்டு இருக்கா!”

“என்னங்க இப்பிடி சொல்றீங்க? முதலாவது தடவையோ பத்தாவது

தடவையோ நம்ம புள்ளைங்க..”

“சரி சரி.. போதும் போதும்.. நிதன் பஸ் என்ன டைமுக்கு வரும்..?”

“9.30 க்குப்பா..”

“சரி அப்ப வெளிக்கிடு கொண்டுபோய் விட்றன்..”

கமலநாதன் வீட்டிற்கு வெளியே இருந்த தன் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்வதற்காக சாவியை எடுத்துச் சென்றார். நிதனும் தன் பையை எடுத்துக்கொண்டு அம்மாவுடன் வெளியே சென்றான்.

“பாத்தியாடா நீ கொழும்புக்கு போறது ஒண்ணும் இது முதல் தடவ இல்லனு சொன்ன அப்பாவே இப்ப உன்ன கொண்டுபோய் விடுறன்னு சொல்றாரு. அவரு வீராப்புலாம் சும்மா, அவரு என்னவிட ரொம்ப பாசக்காரரு..”

“ஐயோ அம்மா, அப்பாவ பத்தி எனக்கு தெரியாதா..?”

“அது சரி.. சரிடா கண்ணா, பாத்து பத்திரமா பொயிட்டு வா, நாட்டு நிலம வேற சரியில்ல.. என்ன பெரிய பாங்கு வேலயோ!?”

“அம்மா.. என்னம்மா..!”

”சரி சரி கவனமா பொயிட்டு வாடா..”

தேவியும் நிதனும் பேசிக்கொண்டு வெளியில் வர, கமலநாதனும் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்ய நேரம் சரியாக இருந்தது.

“போதும் போதும் அம்மா புள்ள பாசம்.. நாடு இருக்கிற நிலமைக்கு எப்ப ஊரடங்குச்சட்டத்த போடுவானுகள் எண்டு தெரியாது.. சீக்கிரம் வந்து பைக்குல ஏறுப்பா.. மாஸ்க்க எடுத்திட்டியா? எதுக்கும் போட்டுக்க.. இப்பலாம் மாஸ்க்க போட வேணாம்னு சொன்னாலும் எதுக்கும் போட்டுக்கிறது நல்லம், கொரானா மட்டும்தானா வியாதி, இன்னும் எத்தினையோ வியாதிகள் இருக்கு. இன்னைக்கு கூட ரெண்டு பேர் செத்திருக்கிறாங்கள். நாடு கிடக்கிற நிலமைக்குள அதெல்லாம் இப்ப எங்க டிவி ல காட்டுறான்..”

“ஐயோ என்னங்க.. சரிங்க.. உங்க அரசியல் விஞ்ஞான பாடத்த இப்ப நடத்த வெளிக்கிட்டீங்களா? சீக்கிரம் வெளிக்கிடுங்க பாப்பம், இப்பவே நேரம் 9.25 ஆகிட்டு..”

நிதன் தந்தையின் வண்டியில் ஏறியமர்ந்தது தான் தாமதம் நாட்டு நடப்புக்களை பேசிக்கொண்டே வந்தார் கமலநாதன். ஓய்வுபெற்ற அரசியல் விஞ்ஞான ஆசிரியர் என்பதாலோ என்னமோ நாட்டின் மீதும் அரசியல் மீதும் அத்தனை ஈடுபாடு அவருக்கு. தேவியோ இல்லத்தரசி. இருவரும் சந்தித்து கொண்டது என்னமோ அரசியல் விஞ்ஞான வகுப்புகளில்தான். அதாவது கமலநாதன் ஆசிரியராக இருந்து நடத்திய வகுப்புகளில் தேவி மாணவியாக வந்த பொழுது சந்தித்து, கற்பித்து, கற்று, காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி.. அது ஒரு

பெரிய காதல் கதை. தேவிக்கு படிப்பு ஏறவில்லையென்றாலும் கணவனை வீட்டை புரிந்து ஏற்று நடக்கும் கண்ணியமான குடும்பப்பெண்ணாக இருந்தாள். இருவருக்கும் ஒரேயொரு ஆண்பிள்ளை, நிதன். உலகமே தாய் தந்தையர் தானென்று அவர்களை சுற்றிவந்து மாங்கனியை பெற்ற விநாயகரையே மிஞ்சிவிடுவான். அம்மா அப்பா என்றால் அத்தனை பிரியம் நிதனுக்கு. அவனும் பள்ளி, கல்லூரி முடித்து, போன வருடம் தான் கொழும்பிலுள்ள இலங்கை மக்கள் வங்கி கிளையொன்றில் பணிபுரிய தொடங்கியிருந்தான்.

என்னதான் நிதன் கல்யாண வயதை எட்டியிருந்தாலும் நாடு போகிற போக்கில், பெண் பார்க்கும் படலம் கொஞ்சம் தள்ளிப்போடப்பட்டிருந்தது. தேவியும் பட்டும் படாமல் அவ்வப்போது சொல்லிப்பார்ப்பார், பின்னர் விட்டுவிடுவார். “அம்மா, எனக்கு இப்பதான் 25 வயசு, நான் இப்பதான் வேலைக்கும் சேந்திருக்கன், ஒரு 2 வருஷம் போகட்டுமே” என்பான் நிதன். இதனாலோ என்னமோ தேவி கல்யாணத்தை பற்றி எதுவுமே பேசுவதில்லை. ஆசையாய் வளர்த்த மகனை சிறிது காலம் அவன் போக்கிலேயே விட்டுவிட்டார்கள்.

நேரம் சரியாக பி.ப 9.30 ஆகியிருந்தது. தந்தையும் நிதனை மட்டக்களப்பு பஸ் தரிப்பிடத்தில் இறக்கிவிட்டார்.

“நிதன், சரி பாத்து பொயிட்டு வா”

“சரிப்பா..”

ஏசி பஸ் ஒன்று தான் புக் செய்யப்பட்டிருந்தது. கண்டக்டருடன் ஏற்கனவே பழக்கம் என்பதால், ஒரு சிறு புன்னகையுடன்
பஸ்ஸில் ஏறினான். ஏறி அமர்ந்து ஐந்து நிமிடங்களில் பஸ் புறப்பட தயாரானது. ஆரம்பத்தில் பயணம் நன்றாகத்தான் இருந்தது. பின்னர் ஒரு பஸ் தரிப்பிடத்தில் ஏற்பட்ட குளறுபடியால் பஸ்ஸில் ஒரு வயதான நபருக்கு சீட் இல்லாமல் போகவும், நிதன் தன்னுடைய சீட்டை அவருக்கு கொடுத்துவிட்டு எழுந்து நின்றான். ஒன்றல்ல, இரண்டல்ல, ஆறரை ஏழு மணிநேரப்பயணம். காதுகளில் இயர்போனை மாட்டிக்கொண்டு கைகள் இரண்டினாலும் மேலிருந்த பஸ் கம்பிகளை பிடித்த வண்ணம் நின்றிருந்தான்.

செவிகளில் அனிருத்தின் இசையில் ஒரு காதல் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. புதிய பாடல்தான், இருந்தும் கேட்ட மறுகணமே நிதன் அந்த பாடலின் எங்கோ ஓர் மூலையில் தொலைந்துபோனான்.

“..நான் பிழை நீ மழலை..
..எனக்குள் நீ இருந்தால்..
..அது தவறே இல்லை..”

நிதன் என்ன நினைத்தானோ என்னமோ, ஏசி குளிரில் உடல் சிலிர்த்துப்போக சுற்றும் முற்றும் தலையசைத்து பஸ்ஸிற்குள் இருக்கும் நபர்களை ஒருமுறை நோட்டமிட்டான். அப்பொழுதான் சிப்பிக்குள் முத்து மறைந்திருப்பதை போல, மாஸ்க்கிற்குள் பாதி முகம்

மறைய, மறுபாதியை நெற்றி முடிகள் மறைக்க இரு காந்த கண்கள் இருப்பதை கண்டான். அந்த கண்களில் ஏதோ போதை இருந்தது எனலாம். ஒரு முறை பார்த்தால், மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலும். அத்தனை வசீகரம். கண்ணோரங்களில் கண்மை இல்லை. இருந்தும் அவை அந்த மெல்லிருள் சூழ்ந்த ஏசி பஸ்ஸிலும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவளுடைய கூந்தல் காட்டாற்றை போல சீட்டின் பின்புறம் எங்கிலும் பரவிக்கிடந்தது. பச்சைநிற உடையணிந்திருந்தாள். அங்குதான் அனிருத்தின் இசையும் நிதனை உண்டு இல்லையென்று பண்ணி அவனை கதிகலங்க வைத்துக்கொண்டிருந்தது.

"..அவள் விழி மொழியை
படிக்கும் மாணவன் ஆனேன்..
அவள் நடைமுறையை
ரசிக்கும் ரசிகனும் ஆனேன்.."

பாடலின் இசை நிதனை தான் பிடித்துக்கொண்டிருந்த பஸ் கம்பிகளில் விரல்களால் தாளம் போட வைத்தது. அந்த முகக்கவசம் அணிந்த மோனாலிசாவை கொஞ்சம் அருகில் நின்று பார்க்க எண்ணியதாலோ என்னமோ, பஸ்ஸின் நடுப்பகுதிக்கு மெதுவாக நகர்ந்துபோய் மீண்டும் அங்கிருந்த பஸ் கம்பிகளை பிடித்துக்கொண்டு நின்றான். அருகில் பார்க்கையிலும் அவள் அழகுதான். அவளும் காதுகளில் இயர்போன் மாட்டியிருந்தாள். பரவிக்கிடந்த கூந்தலுக்குள் மாட்டிய இயர்போன் தூரத்திலிருந்து அவளை ரசிக்கையில் தெரியவில்லையே. அடடே, புத்தகம் ஒன்றும் அவளுடைய கையில் இருந்தது. மோனாலிசா இசையை ரசிப்பவள் மட்டுமல்ல, புத்தகங்களை விரும்பி படிப்பவளும் போலவே. தன்னைப்போலவே இருக்கிறாளென எண்ணிக்கொண்டான் நிதன். அப்பொழுதுதான் அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணி, அவளுடைய அம்மாவாக இருக்க வேண்டும், ஏதோ அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தார். பஸ்ஸில் அநேகமானோர் தூங்கிக் கொண்டிருந்ததால், அவளுடைய அம்மா பேசுவது நிதனுக்கு நன்றாகவே கேட்டது.

"வீனா, என்ன அது காதுல? பஸ்ஸில ஏறின நேரத்தில இருந்து அத காதுல மாட்டிட்டு இருக்கிறா?"

"ஐயோ அம்மா, எனக்கு நாளையண்டைக்கு எக்ஸ



ரம் இருக்கிறதால, என் நோட்ட பாத்துட்டே ரெக்கோடிங் கேட்டுட்டு இருக்கன்.”

“ஆ.. என்னவோ.. கன நேரத்துக்கு அத காதுல வச்சிட்டு இருக்காத, சூடு நல்லமில்ல..”

“சரிம்மா.. பஸ்க்குள்ள ஆக்கள் இருக்காங்க, கத்தாதிங்க.. சரி சரி..”

அம்மாவிடம் சொல்லிக்கொண்டே ஒரேயொரு பார்வை நிதனை பார்த்தாள். அம்மா திட்டுவது அவனுக்கு கேட்கும் என்றுதான் அம்மாவை வைதிருக்கிறாள். நிதனுக்கு சிரிப்பு ஒருபக்கம். இவள் நன்றாக படிக்கிற பிள்ளை போல என்கிற எண்ணம் இன்னொரு பக்கம். அப்பொழுதுதான் அவளுடைய அம்மா இன்னொன்றும் சொன்னார்.

“உண்ட வயசில இருக்கிற பிள்ளைகள் இப்ப படிச்சி முடிச்சிட்டு வேலைக்கு போகுதுகள்.. நீ A/L அயே 3 தரம் எழுதிட்டு இருக்கா.. எனக்கெண்டா தெரியலடி உன்ன வச்சிட்டு என்ன பண்ணப்போறன் எண்டு..”

“அம்மா.. வாயக்கொஞ்சம் மூட்றியா..?”

நிதனுக்கு குபீரென்று வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் எவ்வளவோ முயன்றும், கோவத்தில் சிவந்த அவளுடைய பாதி முகத்தை பார்த்ததுதான் தாமதம் சிரித்தே விட்டான். சிரிப்பு சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தார்கள் தாயும் மகளும்.

“பின்ன என்ன தம்பி? நீங்களே பாருங்க.. இதுக்கு இப்ப 21 வயசாகுது. இப்பிடி A/L அயே மூணுதரம் எழுதினா நான் எப்பிடி இவள கரசேக்கிறது..?!”

ஒருவாறாக அவளுடைய அம்மா தன் கவலையை நிதனிடம் சொல்லி, புலம்பிக்கொண்டிருந்தார். நிதனும் தானாய் வந்த இந்த அருமையான வாய்ப்பை எப்படி நழுவவிடுவான்? அதுவும் அவளுடைய அம்மாவே வந்து பேசுகின்ற பொழுது. ஒரு பக்க இயர்போனை மட்டும் கழற்றிவிட்டு, அவளுடைய அம்மாவின் பேச்சையே கூர்ந்துகேட்பது போல பாவனை செய்தான். உண்மையில் கேட்கத்தான் செய்தான், ஆனால் முழுமையாக அல்ல. நிதனுடைய எண்ணம் பூராகவும் மாஸ்க்கிற்குள் மறைந்திருந்த அவளுடைய பாதிமுகம் எப்படியிருக்கும் என்பதில்தான் இருந்தது. தன்னுடைய அம்மா தன்னைப்பற்றி ஒன்றுவிடாமல் நிதனிடம் சொல்வதை கேட்கையில் அவளுக்கு கோபம் தலைக்கேறிக்கொண்டு வந்தது.

“அம்மா.. ஏன்மா இப்பிடி செய்ற? இதுக்குதான் நான் அப்பாவோட வர்றன்னு சொன்னன்.. இப்ப பஸ் முழுக்க எல்லார்க்கிட்டயும் என்னப்பத்தி சொல்லி சொல்லி வா..”

“..நான் என்னடி பொய்யா சொன்னன்..?”

“..இரு அப்பாக்கு கோல் பண்ணி

சொல்றன்..”

தான் அம்மாச்செல்லம் போல, அவள் அப்பாச்செல்லம் என்று நினைத்துக்கொண்டான் நிதன். இருந்தாலும் சற்று யோசித்தான், இவளைப்பற்றி ஆரம்பத்திலிருந்து என்ன எண்ணினாலும் அது நேர்மாறாகவே இருக்கின்றதே. அதனால் சற்று பொறுத்திருந்தே பார்ப்போம், இல்லையென்றால் இவள் அம்மா அப்பாவிற்கு ஒற்றை பெண்பிள்ளை தான் என்று நாம் எண்ணுவதற்குள், திரைப்படங்களில் வருவதைப்போல நான்கு தடி அண்ணன்கள் வந்து நிற்பார்கள். என்னதான் ஜிம்மிற்கு போய் தேற்றிவைத்த உடம்பு என்றாலும், நிதன் வம்பு தும்புக்கு போகாத நல்ல பிள்ளையாகிற்றே, அதனால் மேற்படி ஒன்றும் யோசிக்காமல் நடப்பதை கவனித்துக்கொண்டு நின்றான்.

கோபத்தில் அவளுடைய நெற்றி உண்மையில் நன்கு சிவந்திருந்தது. மூக்கு மட்டும் சிறிய பழுத்த தக்காளிப்பழமாட்டம். அதை எங்கு ஒழுங்காக பார்க்க முடிந்தது!? இலங்கையில் மாஸ்க் கட்டாயமில்லையென்று செய்தியில் கூட சொல்லியிருந்தார்களே. இவள் ஏன் மாஸ்க் போட்டுக்கொண்டிருக்கிறாள்!? பின்புதான் தானும் மாஸ்க் அணிந்திருப்பதை உணர்ந்து, அதை மெதுவாக கழற்றி தன் பாக்கட்டிற்குள் வைத்துக்கொண்டான். ஒரு சில விநாடிகள் அந்த காந்த விழிகள் நிதனுடைய முகத்தை நோட்டமிடுவதை அவனும் கவனிக்காமலில்லை. இருந்தாலும் கண்டும் காணாதது போல் இருந்துகொண்டான். அழகாக பிறந்தது ஒன்றும் அவனுடைய தவறில்லையே!? ஹா..!

அவள் அவளுடைய அம்மாவை திட்டிக்கொண்டே, அவளுடைய அப்பாவை தொலைபேசியில் அழைக்க முயன்றுகொண்டிருந்தாள்.

“..இரு அப்பாட்ட சொல்றன்..”

“சொல்றனா சொல்லு.. நான் ஒண்ணும் பொய் சொல்லலயே..”

“..ஆ.. அப்பா.. கேக்குதா..?”

“...”

“..அப்பா.. இப்ப கேக்குதா..? ஹலோ அப்பா?”

“...”

“..கொஞ்சம் இருங்க..”

அவள் பேசுவது அவளுடைய அப்பாவிற்கு கேட்கவில்லை போலும். அப்பொழுதுதான் அவள் அந்த மாஸ்க்கை கழற்றினாள்.

“..அப்பா இப்ப கேக்குதா..? அப்பா இந்த அம்மா கூட முடியிலப்பா..”

அதன் பின் அவள் என்ன பேசினாள் ஏது பேசினாள் என்று நிதன் உண்மையில் கவனிக்கவில்லை. அவளுடைய அந்த அழகிய முகத்தை கண்டதும், நிதன் சாப விமோட்ஷனம் பெற்றதை போல்

உணர்ந்தான் எனலாம். அழகிதான் அவள். உண்மையில் மோனாலிசா தான். உணர்ச்சி பொங்க அவள் அவளுடைய அப்பாவுடன் பேசுகையில், கூந்தல் அசைகிற அழகு, தக்காளிப்பழ மூக்கின் அழகு, குண்டுதோசை போன்ற சிறிய வெண் கன்னங்கள் இரண்டு என்று ரசித்துக்கொண்டே இருந்தான் நிதன். பின்புதான் ஏதோ ஞாபகம் வந்தவன் போல சுயநினைவுக்கு வந்தான். இயர்போனில் இன்னொரு பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

"..அடக்காதல் என்பது மாயவலை,
சிக்காமல் போனவன் யாருமில்லை,
சிதையாமல் வாழும் வாழ்க்கையே
தேவையில்லை!
தேவையில்லை!
தேவையில்லை!"

"உண்மையில் தேவையில்லைதான்.." தனக்குள் சிரித்துகொண்டே தன் கையால் தன் தலைமுடியை வாரிவிட்டான் நிதன். ஆறரை மணிநேர பஸ் பயணம் உண்மையில் எப்படிப்போனதென்று நிதனுக்கும் தெரியவில்லை.

## தன்னிறைவான தேசத்தின் இன்றைய நிலை









# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2022

## திரு. இராமச்சந்திரன் இரமணன்

B.Sc. in Agric (Hons), PGDE (Col) M.Sc. in Science

திரு. இராமச்சந்திரன் இரமணன் அவர்கள் 27.06.1976 கோப்பாயில் பிறந்தார். தந்தையின் பெயர் பொன்னம்பலம் இராமச்சந்திரன். தாயின் பெயர் நகுலேஸ்வரன் மீனாம்பாள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் இடை நிலைக்கல்வி, உயர்கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

இவர் நாவலடி, கோப்பாய் மத்தி, கோப்பாயில் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். மனைவி யோகலஷ்மி இரமணன். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் பழைய மாணவி. யாழ் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பட்டதாரி. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். இவருடைய மூன்று பிள்ளைகளில் முதலாமவர் மகன் செல்வன் இரமணன் காருண்யன். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 04ல் கல்வி கற்கின்றார். இரட்டைப் பெண்குழந்தைகள் வருணி, வர்தனி 04 வயது உடையவர்கள்.




### பல்கலைக்கழக கல்வி

2004ஆம் ஆண்டில் விவசாய விஞ்ஞானமானி பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

### பட்டப்பின் மேற்படிப்புக்களின் விபரம்

2020ஆம் ஆண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவினை (Post Graduate

Diploma in Education) கொழும்பு பல்கலைக்கழகத்திலும் 2022ஆம் ஆண்டில் விஞ்ஞான கல்வியல் முதுவிஞ்ஞானமானி (M.Sc. in Science Education) பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்திலும் 2015ம் ஆண்டில் முதுவணிக நிர்வாகமானி (MBA) பட்டத்தினை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார்.

## கடமையாற்றிய/ கடமையாற்றுகின்ற இடங்கள்

2005இல் பயிரியல் துறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராக விவசாயபீடம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடமையாற்றினார்.

சமூகம் சார் செயற்பாடுகளில் ஆர்வம் காரணமாக தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் 2006-2009 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலும் இறுதிப் போர்ச் சூழலில் வவுனியாவிலும் இடர்கால பணியையும் புனரமைப்பு பணிகளையும் ஆற்றியனார்.

2009 பிற்பகுதியிலிருந்து இன்று வரை ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

2009 ஆண்டில் மூதூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் முதல்





நியமனம் பெற்று 2010 ஆண்டில் கண்டி அல்மனார் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியுள்ளார். தொடர்ந்து 2013 ஆண்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடமையாற்றி 2020 ஆண்டிலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

கற்பித்த பாடங்களில் குறிப்பாக உயர்தர இரசாயனவியல் மற்றும் வணிகத்துறையில் உயர்தர வணிகக் கல்வியினையும் கற்பித்தார். இதன் மூலம் மூவினத்து பல் கலாசாராங் கொண்ட ஆசிரியர் தொடர்பு மற்றும் மாணவர்களைக் கையாளும் அனுபவம் கிடைத்ததை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை பாடசாலைகளில் 2018 ஆண்டில் தொழில் முறைக்கல்வியினை அறிமுகம் செய்த போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரில் பகுதித்தலைவராக தொழிற்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தினார்.

மாணவர்களுக்கு வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பால் அவர்களது தேவைகள் மற்றும் இடரினை

இனங்கண்டு அவர்களுக்கு உதவிகள் கிடைக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் தொழிற்கல்விப் பாடத்திட்ட மொடியூல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் வளவாளராகவும் ஆசிரியர்களுக்கு நவீன கற்றல் சாதனங்களைக் கையாளும் பயிற்சி வளவாளராகவும் தொழிற்படுகின்றார்.

யாழ்ப்பாண மாவட்ட தெங்கு செய்கையாளர்களுக்கான விவசாயச்சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் சம்பந்தமான ஆலோசனைக் கருத்தரங்குகளை நடாத்துகிறார். வீட்டிலேயே திறன் டிஜிற்றல் படலினை பாவித்து கற்றலில் இடருறும் மாணவர்களுக்கு இலவசமாக இணையவழி வகுப்புக்கள் நடத்துகிறார்.

## ஆய்வுத்துறைகள்

பயிரியலில் சூழலினைக் கட்டுப்படுத்திய மண்ணின்றிய பயிர்ச் செய்கையில் வெவ்வேறு வர்க்கத்தக்காளிப் பயிரின் மதிப்பீட்டாய்வு.






## முகாமைத்துவம்

1. உள்ளூர் தன்னார்வ தொண்டுகளில் ஈடுபடுபவர்களின் சமூக முயற்சியாண்மை செயற்பாடுகளின் விடய ஆய்வுகள்,

2.கல்வி நிர்வாகத்தில் விஞ்ஞான கல்வியினை மேம்படுத்துவதற்கு பாடசாலை மட்ட முகாமையாளர்களின் சமூக முயற்சியாண்மைச் செயற்பாடுகளில் பங்கு பற்றிய ஆய்வு.

## விருதுகள்

2021ம் ஆண்டு கோவிட்19 தொற்றுத் தடுப்பு நடைமுறைகளினால் ஏற்பட்ட கல்விப் பாதிப்பினை நிவர்த்தி செய்ய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபரின் தலைமையில் நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி பாரியளவில் நடைபெற்ற கற்பித்தல் நுட்பங்கள் இலங்கை பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக அமைந்தது. இணையவழி மூலமாகவும் காணொளிகள் மூலமாகவும் பாடப்பரப்புகளை கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இலங்கையிலுள்ள சகல மாணவர்களும் இலகுவாக

இணையும் பொருட்டு வைபர், வட்சப் போன்ற சமூக ஊடகங்களை பயன்படுத்தி அனைவருக்கும் இலகுவாக இணையவழிக்கல்வியில் இணைய வசதியேற்படுத்தப்பட்டது. செயலட்டைகள் அச்சிடப்பட்டு **pendrive** ல் காணொளிகள் சேமிக்கப்பட்டு வீடு வீடாக வழங்கப்பட்டதன் மூலம் இணையவழிக் கல்வி இலகுவாக்கப்பட்டது.

இதனால் பிரான்சை தலைமையகமாகக் கொண்ட டீஐஊ என்ற பல் தேசியக் கூட்டு நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் கிறிஸ்ரல் பேனா விருது (BIC Cristal Pen Award) 2021 கிடைக்கப் பெற்றது. விருதுடன் 5000 யூரோ டொலர்கள் பணப்பரிசு கிடைக்கப்பெற்றது.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்த விருது 2025 இற் கிடையில் உலகிலுள்ள 250 மில்லியன் சிறுவர்களின் கல்வியை உயர்த்துவதற்கான ஊக்குவிப்பாகும். நூற்றுக்கு மேற்பட்ட முயற்சிகளில் 10 சிறப்பான கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு விருது பெறும் கல்வியாளரும்






அடுத்த சந்ததியை கல்வியில் முன்னேற்ற மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களாக உள்ளனர் என கூறும் டீஐஊ நிறுவனம் ஆசியா பசுபிக்கிலிருந்து திரு. இ. இரமணனை பரிந்துரைத்து விருது வழங்கி அவரையும் பாடசாலையையும் கௌரவித்திருக்கின்றது. எதிர்கால சந்ததியினரின் கல்வி மேம்பாட்டிற்கு உழைத்த, உழைக்கின்ற திரு. இ.இரமணன் அவர்களை வாழ்த்துகின்றோம்.

இவர் மென்மேலும் பல விருதுகள் பெற்று சமூகத்திற்கும் கல்விக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல துர்க்காதேவியை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**நன்றி**
**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**பிறந்தநாள் அறநிதியச்சபை,**
**துர்க்கரதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

இசை

# அடங்காப் பறவை

## நூல் எப்படி?

ஈழத்தின் இன்னல்களை பாடும் ஒப்பற்ற படைப்பு இதுவே!

**புத்தக பட்சியாய் இருந்திடு**
**புத்தம் புது உலகை சிந்தையில் வரைந்திடுவாய்!**
**நேரமிருந்தால் பார்க்க**
**எத்தனையோ பனுவல்களை**
**கடந்திருப்பேன்.**
**இது போல் ஒரு அடங்காப்**
**பறவையை எளிதில் காணலாகா!!!**

இவரை ஓர் ஆசிரியராக ஐந்தாறு வருடம் முதல் கண்ட பொழுது பேனாவும் பேப்பருமாக ஏதோ எழுதியபடி இருப்பார். அவரின் அன்றைய தனிமையும் மௌனமும் அவரை ஆராய வேண்டி தூ ண்டும் பலர் மனங்களில். அவரின் உள்ளக்கிடக்கை சிறகாய் இன்று பறக்கும் என்று அன்றே கனவை விதைத்திருப்பார்..

கவிஞர் தவராசா செல்வா அவர்களின் பத்து வருட கனவை நிறைவேற்றினாலும் ஓயமாட்டேன் என்ற உள்ளக் குரல் படைப்பாளியின் இப் புத்தகத்திலே காணலாம்.

தன் ஏழை நரம்பினாலும் புரட்சி வீணையாலும் என்னை அழகிய இசையாக்கியவள் என் தாய் என்றும் தாய் நிலம் காணாமல் இன அழிப்பால் கரைந்தவர்கள் தன் உறவுகள் என்றும் தாயையும் தாய் மண்ணையும் நேசித்து அவர்களுக்கே சமர்ப்பணம் செய்த இவரின் படைப்பிலே உள்நுழைந்து முத்துக் குளித்தாலும் அடங்காது புரட்டினேன் வரிகளை.



74 கவிதைகளை கொண்ட இந்நூல் அதிகமாய் பாடுகளை பாடுகிறது. இன அழிப்பால் காணாமல் கரைந்த உறவுகளின் பிரிவு, சமூக சீர்திருத்தம், வலி மற்றும் வேதனை, காதல், தீரா விடுதலை, பெண்ணின் சுதந்திர வேட்கை, தாயின் மீதான அளவற்ற அன்பு, இயற்கையின் மீதான அளவற்ற காதல், தத்துவசிந்தை, நிலையாமை கருத்து, புரட்சிகர ஆளுமை இப்படி பல பேசு பொருள்களை தாங்கிய ஓர் பல் உணர்வு படைப்பாக இதை பார்க்கிறேன்.

இவரின் கவிதைகள் பெரும்பாலும் நதியென பாய்ந்து வாசகரை இழுத்துச் சென்று கட்டிப்போடும் ஆற்றல் வாய்ந்தது. வலிகள் நிறைந்த வரிகள் பெரும்பாலும் வலியின் உச்சத்திற்கு கொண்டு சென்றாலும் இறுதியில் ஓர் நம்பிக்கை பாய்ச்சும் புரட்சி வீணை பிறக்கும்.

**‘நான் தூங்கப் போகிறேன் இரவே**
**உனது கரிய மலர்களைப்**
**போர்த்துகையில்**
**நிலவின் புன்னகை தெரிகிறது’** என தொடங்கி




**‘ஆற்றை போல் வருகிறது**
**கண்ணீர்**
**காணாமல் ஆக்கப்பட்ட என்**
**உறவுகளின் உறக்கமற்ற**
**இரவுகளை எண்ணி’**
என முற்றுப் பெறும் இவ்வரிகள் வலிகளின் உச்சத்தை தொடுகிறது. கிரேக்கத்தின் காதாசிஸ் இவ்வாறு உள்ளூறுவதை என்னால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.....

கவிதைக்கு ஆடை தலைப்பை விட ஏது என்பேன்.
மிகவும் அழகியலும், அற்புதமும், தத்துவார்த்தமாகவும், புதியதாகவும், வித்தியாசமான கோணத்திலும் இவரின் தலைப்புக்கள் அமைகின்றன. (ஓர் ஏழைத்தாயின் சிரிப்பு, இது சாத்தான் யுகம், குர்திஸ் முத்தக்கடிதம், நான் ஒரு பொறுக்கி, நிசப்த பூமி,புதுமை ஒரு மீள் நிரப்பி, அவள் ஒரு கவன இசை, ருத்ரன் என்கிறாய், சுமையீனும் எழுத்து, நேரமுகம், ஆழ்மை, குறி மீட்டும் நரர் இப்படி பல .......)

இவரின் கவிதைகள் பார்க்கையில் படைப்பாளியின் உந்துதலில் விடுதலையைத்தான் வெளிப் படுத்துகிறது. முற்போக்கான சிந்தனையையும், நவீனத்துவ போக்கையும் கொண்ட ஓர் புரட்சிகர உலகையையே இவரின் மனத்துள்ளே சிற்றில் என்ன பெரும் கோபுரமே கட்டுகிறார்........

இவரின் கவிதைகளில் காதலும் அதிகமாய் உலாவருகிறது...
தன் காதலியை பலவாறாக கற்பனை

செய்து புதிய பரிணாம சிந்தையை கவிதைக்குள் கொண்டுவருகிறார்.

**'அங்கமெங்கும் பொங்கிவரும்**
**தங்கமேகமே**
**என் சொற்கள் ஒவ்வொன்றும்**
**நட்சத்திரங்களை பூக்கின்றன**
**நீ ஆராட்சிக்குரியவள்**
**ஆய்வு எத்தனை சுகமென**
**உன்னால் அறிந்து கொண்டேன்**
**ஏனெனில்**
**நீ ஓர் புரியாப் புதிர்**
**நானோர் ஓயா ஆய்வு'**

உண்மையில் கற்பனைகள் சுகம் தான். பெண்ணின் ஆழத்தை அறியத்துடிக்கும் அவரின் உள்ளக்கிடக்கை சொல்லுவதை காணமுடிகிறது.

இப்படித்தான் குரல் என்ற கவிதை என்னை ஈர்த்தது.
**'ஒரு தடவை கேட்பதற்காய்**
**அழுகையில்**
**வழிகிறாய்**
**யாரிடமோ எல்லாம்**
**அலைபேசிகளுக்காய்**
**இறைஞ்சுகிறாய்'** என
ஆத்மார்த்தமான காதலை சொல்லிவிடுகிறார்.



இது மட்டுமா
**'எனக்காக பிறந்த**
**தேவமாதுவாகி'** என வரிகள்
முற்றுப்பெற
இவரின் மனத்துள்ளே பெருகும் அற்புத புனிதமான காதல் அழகாய் வளைகிறது.

காதல் உணர்வுகளும் ,உணர்சிகளும் இணைய ஓர் இனிமைக்காதல் வரைகிறார்.

**'கனவின் கதிரில் கர்ப்பந் தரித்தாய்**
**பூவின் உடலை அணிந்து**
**கொண்டாய்**
**ஆண்மை என்னை அதனில்**
**கொண்டாய்**
**பவனம் எனதாய்**
**பருகிக்கொண்டாய்'**

இப்படி விரியும் இந்த அழகிய காதலை உணர்த்திவிடுகிறார்..
இப்படி **'நீ எனதருகில் வருகையில் சக்தியேறுகிறது'** என பெண்ணின் அத்தனை பங்கையும் அவளின் துணையான ஓர் நிலையையும் தன்னை ஆளவேண்டும் அதனை அனுபவிக்க வேண்டும் என்ற தீரா இச்சை கொண்ட பச்சை இதயமாக என் கண்ணிற்கு தெரிகிறார்.

இதனைத்தவிர அவள் ஒரு கவன இசை என்ற கவிதையில் குழந்தை போல ஏங்கி **'கவனமாய் பாத்து போங்கோ'** என்ற அவளின் வார்த்தையை அழகாய் வார்த்தெடுத்து அதற்கு உயிர் கொடுக்கிறார் அவளின் அன்பை பெறும் இவரும் ஓர் குழந்தை போல..........

பாரதியார் எப்படி கண்ணனை பல்வேறாய் பாவனை செய்கிறாரோ அது போல தன் காதலியை பலவாறாக கற்பனை செய்கிறார். இப்படித்தான் சொல்ல இயலும்.

மேலும் இக் கவிஞன் ஆண் தாயாகி விளக்கேற்றும் **'விளக்கில் ஒளிர்ந்திருப்பவன்'** என்ற கவிதையில் தற்கால நடப்பியலை அடித்துக் கூறுகிறார்.

**'இன்று வன்னியெங்கும்**
**மின்சாரமில்லை**
**இப்போதும் மின்சாரமில்லை**
**ஒரு கைப்பிடி விளக்கும்**
**நிலாவும் கலவி கொண்டன**
**அதையும் காண்கிறேன்.**
**இப்படி ஒட்டியே**
**அன்று எனதருகே விளக்கில**
**படித்த தங்கையில்லையே'**

என அவர் சார் கவலைகளை விரிந்தாலும் தற்கால நிலையை




வடித்த தீர்க்கதரிசியாய் இவரை காணுகிறேன்.

இப்படி விரியும் இவரின் கவிதைகள் தன் தாயை அதிகமாகவே பாடுகிறது.

**'அவள் சேலை முடிச்சுக்குள்**
**அவளுடனேயே**
**சில்லறைகள் உறங்கும்!'** என்ற வரிகள் ஒரு கணம் மனதை உலுக்கியதை சொல்லாமல் இருக்கலாமா!

இந்த கவிதை மெற்றோ நீயூஸில் வெளியானது ( 2017.01.06)

இப்படி தன் தாயை நேசிக்கும் ஆத்மார்த்தமான கவிஞனாக இவரை காணலாம். இவரின் கவிதைகள் அதிகம் வலிமையும் பேசும். இக்கணத்தை வாழ், வெறுமை அழகானது, தெளிவு இப்படி பல...

அடங்காப் பறவை என்ற கவிதையில்

**'அது எப்படி அடங்கும்**
**அதன் இறக்கைகளை**
**பறித்து விட்டால்**
**இறந்து விடுமோ**
**இன்னும் காயவில்லை**
**குருதியின் ஈரம்'** என்பதில் துளிர்விட்டுக்கொண்டே இருக்கும் இதன் சிறகு ஏனெனில் இங்கு வலிகளும் கற்பனைகளும் காயங்களும் நிகழ்வுகளும் இன்னும் அடங்கியபாடில்லை. இது அடங்காப்பறவை அதை எழுத துடிக்கும் பட்சி என்று தன் உள்ளத்திடத்தை பறைசாற்றிவிடுகிறார்.

இப்படி நீளும் இவரின் கவிதைகள்.

அதை பாட அதை பார்க்க ஏது சுகம் அதை வாங்கி முழுமையாக ருசித்தலே அழகு!!!!!!

ஆக அடங்காப் பறவையை நுகரும் கணம் மனம் புரட்சியாய் பறக்கிறது. தேடலும், அறிவும், கற்பனையும், உணர்வும், அனுபவமும் நிறைவாய் பெற்ற இவரின் வரமே அடங்காப்பறவையாய் பிறந்திருக்கிறது.

இவரின் கவிதை அரசியல் பாடும் சில தத்துவம் பேசும் பல காதல் பேசும். அதன் ஏக்கம் பேசும். நிறைவாய் வலிமை நம்பிக்கை பேசும். பல யுத்தம் பேசும். அதன் இன்னல் பாடு பேசும். இப்படி பல வடிவம் பெறும் அற்புததேரில் உலா வருகிறார்........

இவரின் அடங்காப் பறவை பல வரண்ட மனிதர்கள், துவண்ட உள்ளங்கள், இப்படி பலருக்கு புது ராகம் இசைக்கும்.
மனம் உவகை பெறும். சிறகு இரட்டிக்கும்.
பல வாசகர்களில் அதன் ரசிகர்களில் இவளும் ஓர் ரசிகையாய் கொஞ்சமாய் புரட்ட மனம் இசைந்த கணம் மதிப்பீடு செய்தவை.
இவரின் கவிதைகள் ஆழம் நிறைந்தவை
முத்துக்குளிக்க நாள் போதா
தொட்டுவிட்டு செல்கிறேன்.
இலக்கிய பயணத்தில் என்றும் சிறகாய் வலம் வர என் வாழ்த்துக்கள்.

*என்றும் அன்புடன் மதிப்புடன்*
*ரசிகையாய்*
**இசை**

## கடலில் மூழ்கிய ஹோட்டல்

ஹொங்கொங்கின் பெருமைக்குரிய அடையாளமாக திகழ்ந்த சீன அரண்மனை வடிவிலான ஜம்போ கிங்டம் ஹோட்டல் கடலில் மூழ்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா காரணமாக மூடப்பட்டிருந்த கப்பல் பராமரிப்பு செலவு காரணமாக துறைமுகத்திலிருந்த அகற்றப்பட்டு இழுவைப் படகுகளால் இழுத்துச் செல்லப்பட்ட போது கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சங்கமம்

ருஸ்னா நவாஸ்
(மாவனல்லை)

என் மொத்த உலகின்
ஒற்றைக் கடல் நீ!

சிறு பிள்ளையாகி நதியின்
ஊற்றுக் கண்களிலிருந்து
உனக்கான காகிதக் கப்பல்களை
வேட்கையுடன் அனுப்புகிறேன்

அவை வெறும் காகிதக் கப்பல்களல்ல
அவை வார்த்தைகள்
உனக்கானவை!
உன்னைச்சேர அனுப்பி வைக்கின்றேன்

உன்னை அவை வந்து சேர்ந்ததற்கான
எந்தத் தடயமுமில்லை

மீன் குஞ்சிகளிடம் சேதி
கேட்கிறேன் ~ பதிலில்லை
நானே மீனாகின்றேன் ~ நீந்தி உன்னை
அடைய முடியாது திரும்புகிறேன்

நீரிலே மிதந்து செல்லும் இலையிடம்
வினவுகிறேன் ~ பதிலில்லை
இலையாகின்றேன் நான்~ உன்னைச் சேருமுன்பே
இல்லாது போகின்றேன்

கண்ணீரில் மூழ்கிக் கரைகின்றேன்
உயிரின் சாயம் நதியோடு கலக்க என்
உயிர்க்கால்கள் உன்னை நோக்கி நகர்கின்றது

கடும் மேடு பள்ளம் தாண்டி ஓடிவருகின்றேன்
காயம் கொள்கிறது ஆன்மா

பல்லாயிரம் கற்கள்
தடைக்கற்களாகின்றன
வலிமையோடு கடக்கின்றேன்

இறுதியில்
உன்னோடு கலக்கின்றேன்
உன்னால் என் இயல்பு துறக்கின்றேன்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

# ஈழச் சூழலியல்

## அல்கா மலர்ச்சி

அல்கா மலர்ச்சி என்பது நுண் தாவரத் தொகுதியின் திணிவு தெளிவாக கண்ணுக்குப் புலப்படும் வகையில் அடர்த்தியாக இருக்கும் நிலையாகும். அதிகமான மலர்ச்சிகள் அல்காக்களினால் ஏற்படுவதனால் இம்மலர்ச்சி பொதுவாக அல்கா மலர்ச்சி எனப்படும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படும் தொழிற்சாலை நடவடிக்கைகள், செறிவான பயிர்ச்செய்கைகள், விலங்குப்பண்ணைகள் காரணமாக அந்நாடுகளிலேயே அல்கா மலர்ச்சி என்பது பிரதானமாக முதன்முதலாக



அறிமுகமானது. இதற்கு 1960 இல் Erie குளத்தில் ஏற்பட்ட அல்கா மலர்ச்சி யாவரும் நன்கறிந்த உதாரணமாகும். 1991 இல் அவுஸ்ரேலியாவில் Darling ஆற்றில் ஏற்பட்ட பாரிய அல்கா மலர்ச்சி காரணமாக ஆற்றின் 1000 கிலோ மீட்டர் வரை பாதிக்கப்பட்டதுடன் New South Wales அதிகாரிகளினால் 21 நாட்களுக்கு அவசரகால நிலமையை பிரகடனம் செய்ய நேர்ந்தது.

கடந்த 20 வருட காலத்தில் கொத்மலை, மவுசாக்கலை, கிரிதலே, பராக்கிரம சமுத்திரம், உல்கிடிய, கந்தலம, காசல்ரீ, ராஜாங்கன, நாச்சாதுவ, திஸ்ஸ வெவா, நுவரவெவா, போன்றவற்றில் அல்கா மலர்ச்சி பாரியளவில் காணப்பட்டுள்ளது. இலங்கையின் உலர் வலயத்தில் காணப்படும் சில சிறிய அளவிலான நீர் நிலைகள் வரண்ட காலத்தில் அல்காவினால் மூடப்படுகின்றன.

அல்காவின் ஒளித்தொகுப்பு 1981 ல் ஸ்ரம் (Stumm) மற்றும் மோர்கன் (Morgan) என்பவர்களினால்

$$106CO_2 + 16NO_3^- + HPO_4^- + 122H_2O + 18H^+ = C_{106}H_{263}O_{110}N_{16}P + 138O_2$$

விருத்தி செய்யப்பட்ட மேலுள்ள சமன்பாட்டால் விளங்கப்படுத்தலாம்.

நைதரசன், பொசுபரசின் அனுத்திணிவு முறையே 14, 31 ஆக கொள்ளும் போது அல்காவில் காணப்படும் நைதரசன், பொசுபரசின் திணிவு விகிதமானது 16×14/1×31=7.2 ஆகும்.

பொதுவானதொரு வழிகாட்டியாக நீரில் நைதரசனின் செறிவு பொசுபரசின் செறிவை விட 10 மடங்கு அதிகரித்து இருக்குமாயின் அந்நீரில் அல்கா வளர்ச்சி பொசுபரசினால் மட்டுப்படுத்தப்படும். அதே போல் N:P உள்ள விகிதாசாரம் 10 ஐ விடக் குறையுமாயின் அல்காவின் வளர்ச்சி நைதரசனால் மட்டுப்படுத்தப்படும். அல்கா மலர்ச்சியானது, நீந்துதல் போன்ற நீர்விளையாட்டுக்களுக்கு தடையாக இருக்கும். அல்கா நீரில் காணப்படுமாயின் நீர் ஒத்துவராத நிறத்தையும், விரும்பத்தகாத மணத்தையும், ஏற்றுக்கொள்ள முடியாத சுவையையும் தருமாகையால், குடிநீராக பயன்படுத்துவதற்கு நீரை விசேடமான சுத்திகரிப்பு முறைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

மேலும் அல்காக்கள் குழாய்களை அடைத்து வடித்தல் செலவை அதிகரிக்கச் செய்யும். அல்காக்களின் கலங்களில் இருந்து சுரக்கப்படும் பதார்த்தங்கள் நீரில் கிருமிகளை அழிக்க பயன்படுத்தபடும் குளோரினுடன் சேர்ந்து டிரைக்லோ மெதேன் என்ற பதார்த்தத்தை உருவாக்க முடியும். இப்பதார்த்தம் புற்று நோயைக் ஏற்படுத்தும் பதார்த்தமென இனங்காணப்பட்டுள்ளது. அல்கா மலர்ச்சி அதன் சிதைவடைதலுக்காக நீரில் உள்ள ஒட்சிசனை பாவிப்பதால் நீரின் ஒட்சிசன் குறைவடைந்து மீன்களின் இறப்புக்கு வழிகோலும். அதே நேரம் அல்கா சிதைவடையும் போது நச்சுப்பதார்த்தங்களும் உருவாகின்றன. அமில மழைக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய டைமீதயில் ஸல்பைட் (Dimethyl Salphide) என்ற பதார்த்த்தையும் இது உருவாக்குகின்றது

## அல்காக்களினால் உருவாக்கப்படும் நச்சப்பதார்த்தங்கள்

நீர்தேக்கங்களில் பல வகையான நீல-பச்சை அல்காக்கள் காணப்படினும் அவற்றுள் ஒரு சில மட்டுமே நச்சுப்பதார்த்தங்களை உருவாக்குகின்றன. அவைகளாக அனபீனா (Anabeana), மைக்குரோசிஸ்டிஸ் (Microcystis), சிலின்ட்ரோஸ் பேர்மெப்சிஸ் (Cylindrospermopsis) லிங்பியா (Lyngbia) ஒஸ்ஸிலாடோரியா (Oscillatoria)





நொடுலோரியா (Nodularia) போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில நச்சுப்பதார்த்தங்கள் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியன. தோல் அழற்சி, டோர்மடைடிஸ், சமிபாட்டுக் கோளாறுகள், வயிற்று வலி, வாந்தியெடுத்தல் என்பன மனிதனுக்கு ஏற்படும் நோய்களின் அறிகுறிகளாகும். இன்னும் சில நச்சுப்பதார்த்தங்கள் சிறுநீரகம், ஈரல் என்பவற்றில் தாக்கம் ஏற்படுத்தும். சைனட்டை விட 1000 மடங்கு நச்சுத்தன்மையுடைய மைக்கிரோசிஸ்டின் (Microcytis LR) என்ற பதார்த்தம் அல்காக்களினால் உருவாக்கப்படுகின்றதொன்றாகும்.

சில நச்சுப்பதார்த்தங்கள் நிறமற்றவை அத்துடன் அல்காக்களை முற்றாக அழித்த பின்பும் சில வாரங்களுக்கு அதன் நச்சுத்தன்மை உயிர்ப்புடன் இருக்கும். நீரைக் கொதிக்க வைப்பதன் மூலம் இவற்றை அழிக்க முடியாது. நீர் நிலைகளில் காலத்துக்கு காலம், இடத்துக்கு இடம் நச்சுப்பதார்த்தங்களின் அளவு வேறுபடுவதனால் அல்கா மலர்ச்சியால் ஏற்படும் நச்சுத்தன்மையை சரியாகக் கணித்து கூற முடியாது.

1991 இல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மைக்குரோசிஸ்டிஸ் அரிகினோசா அல்கா மலர்ச்சி ஒரு படையாக முற்றாக மூடியது. நீரேந்தும் பகுதிகளில் உள்ள பாற்பண்ணை மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வரும் போசனைப் பதார்த்தங்களால் இது ஏற்பட்டது எனக்கூறலாம். கடைசி மன்னனால் கட்டப்பட்ட (1810-1812) கண்டி குளத்தில் 1999 இல் சயனோபக்டீரியம் இனமான மைக்குரோசிஸ்டிஸ் அரிகினோசாவின் நச்சுப் பொருள் விடுவிக்கும் சில அல்காக்கள் மலர்ச்சி காணப்பட்டது. இக்குளம் 1 ஹெக்டேயர் பரப்பளவையும் 3.25 km சுற்றளவையும் கொண்டுள்ளது. அதி கூடிய 13 மீற்றர் ஆழத்தையும் 2.348 MCM கொள்ளளவையும் கொண்டது. கண்டி நகரிலிருந்து கழிவு நீரானது 28 இடங்கள் மூலமாக குளத்தை அடைகிறது. அடிப்படை ஆரய்ச்சிக்கான நிறுவனம் (IFS) 1997-2002 காலப்பகுதியில் நடாத்திய ஆய்விலிருந்து நீரியல் சம்மந்தமான முழுத் தகவல்களையும் தொகுத்துள்ளது. உயர் BOD பெறுமானமாக 56 mg/L காணப்படுவது குளம்



அதிகம் மாசடைந்துள்ளதைக் காட்டுகிறது. இக் குளத்தில் உள்ள நீரை வரட்சிக்காலத்தில் குறைப்பது குளத்தின் அடியில் ஆழமான படையில் காணப்படும் பொசுபரசை M.aerugenosa அல்காவிற்குப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதால் அதன் உயிர்த்திணிவு மலர்ச்சிக்குரிய அளவுக்கு அதிகரித்துச் செல்கிறது.

2013 ஆம் ஆண்டு ஜனவரி 26 ம் திகதி உல்ஹிட்டிய நீர்தேக்கத்தில் ஒரு அல்கா மலர்ச்சி ஏற்பட்டது. இந்த அல்கா முக்கியமாக நச்சுத்தன்மையை உண்டாக்கும் மைக்குரோசிஸ்டிஸ் (Micricystis) என இலங்கை அடிப்படைக் கல்விக்கான நிறுவனம் இனங்கண்டது.

ஆராய்வோம்.........

## தன்னிறைவான தேசத்தின் இன்றைய நிலை













காவ்யமோகன்

# சித்திராங்கதா

47

நல்லை இளவரசி

ஒரு மாளிகை அழகாகத் தெரிகிறது என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று அந்த மாளிகை உண்மையிலேயே அழகாக கட்டப்பட்டிருக்கலாம். அல்லது அழகை ஆராதிக்கக்கூடிய யாரோ ஒருவர் அந்த மாளிகையில் வசிக்கலாம். அப்படி அழகை பெரிய விடயமாக கொண்டாடுகிற ஒரு மாதரசியின் மாளிகைக்குத்தான் வன்னியத்தேவன் வருணகுலத் தானையும் சித்திராங்கதாவையும் அழைத்து வந்தான்.

அந்த மாளிகையின் நடுப்பீடத்தில் மகாராணி போல் ஒருத்தி காலின் மேல் மறுகால் ஏற்றி கம்பீரமாக அமர்ந்திருந்தாள். அவளது நேர் வகிட்டில் இழையோடி இருந்த ஓரிரு வெள்ளை முடிகள் அவளது பிராயத்தை சொன்னது. ஆனால் கண்கள் அவள் இந்த பிராயத்திலும் இளமையானவளே என்று சொன்னது. காண்பவர்கள் எல்லோரும் அவள் காலடிக்கு கீழ்தான். அப்படித்தான் இருந்தது அவள் கம்பீரம்.

இவர்கள் மூவரும் தன்னை நோக்கி வருகிறார்கள் என்று நன்கு தெரிந்திருந்தும் அவள் கம்பீரம் சிறிதும் சலனம் கொள்ளவில்லை. நெருங்கி வந்த மூவரையும் நோக்கி அமர்ந்தபடியே தன் வணக்கத்தை தெரிவித்தாள் அந்த கம்பீர அழகி.

திமிரான அவளது வணக்கம் வருணகுலத்தானிற்கு புதிதாக தெரிந்தது. தலைவிரித்து படமெடுத்து நிற்கின்ற ராஜநாகம் ஒன்றின் உருவம் வருணகுலத்திற்கு ஏனோ நினைவு வந்தது. அதை இரசித்தபடியே வருணகுலத்தான் பதில் வணக்கம் கூறினான். சித்திராங்கதாவும் அந்த திமிரின் அழகில் மிரண்டவளாகவே பதில் வணக்கம் கூறினாள்.

வன்னியத்தேவன் வருணகுலத்தானை நோக்கி

“தஞ்சை தளபதியாரே, தங்கள் சங்கிலிய மகாராஜா எங்ஙனம் அதர்மம் இளைத்து இவ்வாட்சி பீடத்தை அபகரித்துக் கொண்டார் என்று நான் கூறிய சம்பவத்தை கட்டுக்கதை என்றீர்களே, அது கட்டுக்கதை அல்ல என்பதற்கு நிகழ்கால சாட்சியாக இந்த மகாராணியை உங்களிற்கு அறிமுகப்படுத்துகிறேன். மேற்படி விடயங்களை நீங்கள் ராணியிடமே

கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.” என்று கூறி அமைதியாக ஒதுங்கி நின்றான்.

வருணகுலத்தானிற்கு நிகழ்வது என்ன என்று புரியவில்லை. யார் இந்த ராணி? இந்த ராணியிடம் என்ன ஆதாரத்தை கேட்பது? கேட்க வேண்டியதன் அவசியம் தான் என்ன? என்ற குழப்பத்தில் மௌனம் கலையாமல் அவன் நின்று கொண்டிருந்தான்.

ஆனால் சித்திராங்கதாவிற்கு அந்த ராணியிடம் ஏதாவது பேச வேண்டும் போல் இருந்தது.

“மகாராணி என்று தங்களை வன்னியத்தேவர் கூறுகிறார். தங்களை பார்க்கையில் என் கண்களும் அதையே சொல்கிறது. ஆதலால் நானும் தங்களை மகாராணி என்றே அழைக்கிறேன்”.


“தாராளமாக அழைக்கலாம் சித்திராங்கதா. நான் மகாராணியே ஆவேன். தங்கள் முடிக்குரிய வேந்தர் என்று கொண்டாடுகிறீர்களே சங்கிலிய மகாராஜா....”

என்று கூறி தன் பார்வை நின்ற இடத்திலே குத்தி நிற்க சிந்தனையில் எங்கோ மூழ்கி சென்றாள் மகாராணி. அந்த சிந்தனையில் தெரிந்த சோகத்தை கலைக்க விரும்பாதவளாய் அமைதியாக காத்திருந்தாள் சித்திராங்கதா.

“மகாராணி கூற வந்ததை முழுமையாக கூறாமல் எம்மை இங்ஙனம் காக்க வைப்பது எதனால் என்று தெரியவில்லையே” பொறுமை தவறி கேட்டான் வருணகுலத்தான்.

வருணகுலத்தான் குரலால் சிந்தை திரும்பிய ராணி அந்த அழகிய சோக முகத்தை புன்னகை முலாமிட்டு மறைக்கத் தொடங்கினாள்.

“மன்னிக்க வேண்டும் தஞ்சை மாவீரரே! தங்களை காக்கவைக்கும் நோக்கம் எனக்கல்ல. காத்திருப்பின் வலியே வாழ்வின் சாரம் என்று ஆனவள் நான். பல ஆண்டுகளாக, பல யுகங்களாக காத்திருந்து கடைசியில் ஏமாற்றத்தையே வரமாக பெற்ற இந்த மகாராணி இன்னொருவரை காக்க வைக்க எக்காலத்திலும் துணியேன்”.



“புரியவில்லை மகாராணி! மகாராணியான தாங்கள் யாரால் எங்ஙனம் ஏமாற்றப்பட்டீர்கள்?” பெருங்குழப்பத்துடன் கேட்டான் வருணகுலத்தான்.

“வேறு யாரால்?
யாரை நீங்கள் இன்று மகாராஜா என்று கொண்டாடுகிறீர்களோ? அந்த சங்கிலியனால் தான் ஏமாற்றப்பட்டேன் இந்த மகாராணி”

“சங்கிலிய மகாராஜா தங்களை ஏமாற்றினாரா? என்ன கூறுகிறீர்கள் மகாராணி. தாங்கள் யார் என்று கூட இதுவரை நான் அறியவில்லையே?”

“அறிந்திருக்க மாட்டீர்கள் தளபதி. நல்லை அரண்மனை அந்த கசப்பான உண்மைகளை உங்களிடம் எப்படியும் மறைத்திருக்கும் என்று நான் நன்கறிவேன். நானே கூறுகிறேன். இராஜகாமினி என் பெயர். முன்னை வேந்தர் எதிர்மன்ன சிங்க மகாராஜா என் தந்தையாவார்.”

இராஜகாமினி அவ்வாறு கூறியதும் சித்திராங்கதாவும் வருணகுலத்தானும் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர். ஆச்சர்யத்தில் விரிந்த அவர்கள் கண்கள் வன்னியத்தேவனை பார்த்தபோது “ஆமாம்.” என்று தலையசைத்தான் வன்னியத்தேவன்.

“தேவி! தாங்கள் எதிர்மன்ன சிங்க மகாராஜாவின் மகளா?”

“ஆம் தளபதியாரே. நல்லை அரண்மனையில் இளவரசியாக வளர்ந்த இராஜகாமினி நான் ஆவேன். பிறப்பில் எனக்கு முறையில் உரித்தானவன் தான் சங்கிலியன். சிறுபிராயந் தொட்டே சங்கிலியனே என் துணைவன் என்று அந்தப்புரம் எனக்கு சொல்லிவந்தது. மலராத வயது தொட்டு மலர்ந்திருந்தது என்னுள் காதல். வளர வளர அந்தக் காதல் பெருகியது. அனைத்தையும் இறுதியில் பொய்யாக்கிப் போனான் உங்கள் மகாராஜா சங்கிலியன்.”

இராஜகாமினி கூறுவதை பொய் என்று முழுவதுமாய் மறுக்கமுடியவில்லை வருணகுலத்தானால். அவள் வார்த்தைகள், உணர்வுகள் முழுதிலும் உண்மை ஒன்று வெளிப்படுவது வெளிப்படையாகவே அவனிற்கு தெரிந்தது.

தன் காதல் ஏமாற்றமடைந்த துயரத்தை இராஜகாமினி கூறுகையில் சித்திராங்கதாவின் கண்கள் குளமாகி இருந்தன. இராஜகாமினியின் சோகமே தன் எதிர்காலமாய் ஆகிவிடுமோ என்ற அவளது உள்ளத்து அச்சம் இப்போது அவளை நிலைகுலைய வைத்திருந்தது.

“அழகு என்ற சொல்லிற்கே அர்த்தம் போல் இருக்கும் தங்களையா மன்னர் ஏமாற்றினார். எதற்காக மகாராணி?..” தழுதழுத்த குரலில் கேட்டாள் சித்திராங்கதா.


“ஒரு காதலை ஏமாற்ற இன்னொரு காதலை காரணம் காட்டினான். திருமலை வன்னியரது புதல்வி கல்யாணி தேவி. அவளையே கரம் பற்றிக் கொண்டான் சங்கிலியன். பாவம்

அவளது ஆயுளும் சங்கிலியனாலே பறிபோனது. அரசியல் அவாவில் அவன் ஆற்றிய சூழ்ச்சிகளால் கொதித்தெழுந்த கலகக்காரர்கள் சங்கிலியனை கொன்றே தீரவேண்டும் என்று திரிந்தார்கள். சங்கிலியன் தலைமறைவானதால் எல்லை மீறிப்போன கலகக்காரர்களின் கோபத்தில் கல்யாணிதேவி கொல்லப்பட்டாள். சங்கிலியனால் வாழ்வு பெற்று உயிரை இழந்தாள் கல்யாணி தேவி. வாழ்வை இழந்து உயிர் சுமந்து நிற்கிறேன் நான். ஆனால் தங்கள் மகாராஜா மஞ்சரி தேவியை மணந்து கொண்டு இப்போது முடியரசராய் கொடி கட்டி ஆள்கிறார்."

என்று கூறி விரக்தியில் புன்னகைத்தாள் இராஜகாமினி.

அவள் சொல்வதை யாராலும் நம்பாமல் இருக்க முடியாது. ஆனால் முழுவதுமாய் அவள் கூறுவதை நம்பவும் வருணகுலத்தானால் முடியவில்லை. அதேவேளை இராஜகாமினியை எதிர்த்து வாதிட அவன் பரிவு இடந்தரவில்லை.

"தேவி தாம் கூறுவது எல்லாம் உண்மை என்றால் தாம் எங்ஙனம் இங்கு வந்தீர்கள்? முன்னை



வேந்தரின் மூன்று வயது பாலகனை அரசர் கொன்று ஆட்சிபீடம் ஏறியதாய் வன்னியத்தேவர் சொன்ன கதைகளும் உண்மைதானா மகாராணி?" என்று குழப்பத்துடனே கேட்டான் வருணகுலத்தான்.

"தாம் இன்னும் அவற்றை நம்பவில்லை என்பதால் தங்களிற்கு அவை கதைகள். எனக்கு அவை மனதை விட்டகலா கடந்தகாலச் சுவடுகள். என் தந்தைக்கு நீண்டநாளாய் ஆண்வாரிசு வாய்க்கவில்லை. ஆகையால் சங்கிலியனே அடுத்த முடிக்குரிய வேந்தன் என்று ஆட்சியிலிருந்த என் தந்தை முன்னர் சொல்லியிருந்தது உண்மைதான். இளவரசியான என்னை மணந்து முடிக்குரிய மன்னனாக வேண்டுமென்று என் தந்தை சங்கிலியனிற்கு ஆணையிட்டார். ஆனால் அதை மறுத்து எப்போது அவன் கல்யாணி தேவியை மணந்து கொண்டானோ? அன்றே என் தந்தை சங்கிலியன் ஆட்சி பீடமேறுவதை இனி எக்காலத்திலும் அனுமதியேன் என்று சபதமுரைத்தார்.

பின் நெடுநாள் கழித்து என் சிற்றன்னை மூலம் என் தந்தைக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனிற்கு மூன்று வயது எட்டும்போது தீராத நோய் என் தந்தையை பற்றிக் கொண்டது. ஆதலால் மூன்றே வயதான என் சகோதரனே நல்லையின் அடுத்த வேந்தன் என்றும் அதுவரை அரசை என் சிற்றப்பன் அரசகேசரி பார்த்துக் கொள்வார் என்றும் அரசவையில் அறிவித்தார். அங்ஙனம் அறிவித்து சில நாட்களிலே அவரை பற்றிக்

கொண்டிருந்த நோய் அவரது இன்னுயிரை பறித்து சென்றுவிட்டது.”

இராஜகாமினியின் திமிரான அந்த கண்களில் கண்ணீர் சொட்டத் தொடங்கியது.

“என் தந்தை இறந்து சில நாட்களிலே அரண்மனையில் சங்கிலியனை அடுத்த வேந்தனாக்கும் இரகசிய பணிகள் மெல்ல மெல்ல அரங்கேறத்தொடங்கின. ஆட்சி வேட்கையில் என் பச்சிளம் சகோதரனை கருணையேயில்லாமல் கொன்றுவிட்டான் சங்கிலியன். அந்த அநியாயத்தை எதிர்த்து கேட்ட என் சிற்றப்பனையும் கொன்றான். இப்படி அவன் அக்கிரமங்கள் மேலெழ சங்கிலியனே அடுத்த வேந்தன் என்ற முழக்கம் அரசவையில் ஓங்கத் தொடங்கியது. அதற்கு மேல் அங்கிருக்க என் மனம் இடந்தரவில்லை. புறப்பட்டு வந்தேன்.

வன்னி மாளிகையில் எனக்கொரு அடைக்கலம் கிடைத்தது. சங்கிலியனின் வக்கிர புத்தியை உணர்ந்த வன்னி வேந்தர் தயவால் இன்று இங்ஙனம் உயிர் பிழைத்து இருக்கிறேன். தாங்கள் மகாராஜா என்று கொண்டாடித் தீர்க்கிறீர்களே அந்த பாதகனால் வாழ்விழந்து நிற்கும் இந்த மகாராணி இராஜகாமினி நான் என்று தங்களிற்கு இப்போது புரிகிறதா வருணகுலத்தாரே?”

அந்த கம்பீர அழகியின் கண்கள் முழுவதுமாய் நனைந்திருந்தன. பேசுவது என்னவென்று தெரியாமல் மௌனமாகவே நின்று கொண்டிருந்தனர் சித்திராங்கதாவும் வருணகுலத்தானும்.

வடிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டே திமிரின் உச்ச தொனியில் ராஜகாமினி மீண்டும் பேச தொடங்கினாள்.

“ஆனால் தளபதியாரே, என் வாழ்வு உள்ளவரை என் உள்ளத்தில் பற்றி எரிகிற தணல் அணையாது. என் வாழ்வை நிர்க்கதியாக்கியாக்கிவனை சிம்மாசனத்தில் இருந்து விரட்டி என் தந்தை விட்டுச் சென்ற பொறுப்பில் ஒரு முறையான வேந்தனை முடியரசனாய் அமர்த்தும்வரை என் உள்ளத்து தணல் அணையாது... அணையவே அணையாது”

ராஜகாமினி கூறிய தொனி அங்கிருந்த அனைவருக்கும் மிகவும் பயங்கரமானதாக தெரிந்தது.

“என் நெஞ்சு கனமாக இருக்கிறது மகாராணி. மற்று ஏது கூறுவதென்றும் எனக்கும் தெரியவில்லை.”

பரிவு மிகுந்த பார்வையோடு ராஜகாமினியை பார்த்து கூறினான் வருணகுலத்தான்.

“தாம் படைத்தளபதியாவீர்கள். தமக்கு அறிவுரை கூறுவது என் நோக்கமல்ல. தாமே யாவும் அறிவீர்கள். சிறிது சிந்தியுங்கள். தங்கள் வீரமும் விவேகமும் இந்த ஈழமண்ணில் முறையற்றவர்களுக்காக வீணாகிவிடக் கூடாது என்பதே இந்த ராஜகாமினியின் வேண்டுகோள். அதற்காகவே தங்களை சந்திக்க

விரும்பினேன். சிறிது சிந்தியுங்கள். பின் தெளிவாய் முடிவெடுங்கள்.”

“நன்றி மகாராணி.
நான் விடை பெறுகிறேன்.”

அந்த மண்டபத்திலிருந்து விரைந்து விலக வேண்டும் போல் இருந்தது வருணகுலத்தானிற்கு.
சித்திராங்கதாவை பார்த்தான். அவள் இமை மூடாது ராஜகாமினியினை ஏதோ ஒரு பாசம் ததும்ப பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதை அவதானித்த வன்னியத்தேவன்

“தளபதியாரே , ஆடலரசி சித்திராங்கதா மகாராணியிடம் ஏதோ பேச நினைக்கிறார் போல் இருக்கிறது. நாம் சென்று அரசவையில் காத்திருப்போம். ஆடலரசி ராணியிடம் சிறிது பேசிவிட்டு வரட்டும்.” என்றான்.

வருணகுலத்தான் மீண்டும் சித்திராங்கதாவை பார்த்தான். அவளும் அதற்கு தாங்கள் உடன்படவேண்டும் என்பதுபோல் பார்த்தாள்.

அவள் கேட்டால் மறுக்கப்படுமா என்ன? வன்னி அரண்மனைக்கு சென்று காத்திருந்தான் வருணகுலத்தான். நல்லை அரசவையின் இதுவரை அறியப்படாத இன்னும் பல இரகசியங்களை இராஜகாமினி மூலம் அறிந்து கொண்டிருந்தாள் சித்திராங்கதா.

தொடர்வாள்...

## நாய்களுக்கான தேநீர் விடுதி

நியூயோர்க் நகரில் முதல் முறையாக நாய்கள் முழு சுதந்திரத்துடன் பொழுது போக்கும் தேநீர் விடுதி திறக்கப்பட்டுள்ளது. வழக்கமான தேநீர் விடுதிகளில் நாய்கள் அழைத்து வருபவர்களின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படும் நிலையில் இங்கு அது போன்ற எந்த கட்டுப்பாடுகளும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒரு நடுவரின் வாக்குமூலம்

கிரிக்கெட் உலகில் மிகச்சிறந்த நடுவராக செயற்பட்டு தனக்கென்று ரசிகர்களை வைத்து இருந்தவரும் அவுஸ்திரேலியா நாட்டை சேர்ந்தவருமான சைமன் டஃபல், ஐசிசி வழங்கும் வருடாந்த சிறந்த நடுவருக்கான விருதை தொடர்ந்து ஐந்து வருடங்கள் (2004 முதல் 2008 வரை) வென்றவர் என்பது சிறப்பம்சமாகும்.

தற்போது ஓய்வுபெற்று விட்ட சைமன் டஃபல், மொத்தமாக 74 டெஸ்ட் போட்டிகள், 174 ஒருநாள் சர்வதேச போட்டிகள், 34 ரி20 சர்வதேச போட்டிகளுக்கு நடுவராக செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் Cricinfo இணையத்தின் Cricket Monthly க்கு வழங்கிய நேர்காணலில் பகிர்ந்த விடயங்கள்.






தொழில்நுட்பங்களின் அழுத்தம், நடுவர்களின் திறமையை குறைத்து மதிப்பிட பயன்படுத்தக் கூடாது என்ற சைமன் டஃபல், அகல-பந்து (wide) மற்றும் உயரத்திற்கு வழங்கப்படும் நோ-போல் (Height No-ball) என்பவற்றுக்கு நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் DRS பயன்படுத்தலில் உள்ள சிக்கல், ஏன் (Bails) முக்கியமானது, கிரிக்கெட்டில் விசேட தொலைக்காட்சி நடுவரின் (TV umpire) தேவை மற்றும் வீரர்கள் விளையாட்டின் விதிகளை கற்றுக் கொள்வது அவசியம் என்பன தொடர்பாக இந்த நேர்காணலில் பகிர்ந்து இருந்தார்.

//அக்டோபரில் இருந்து, கிரீஸ் முழுவதும் மட்டையாளர்கள் குறுக்காக நகரும் விதத்தின் காரணமாக, பந்து வீச்சாளர்களுக்கு




அதிக நன்மை பயக்கும் வகையில் அகல-பந்துகளை நிர்வகிக்கும் விதியை மாற்றப் போவதாக MCC கூறியுள்ளது. T20களில் அணிகளுக்கு கிடைக்கும் இரண்டு DRSகளின் ஒரு பகுதியாக அகல-பந்துகளை மூன்றாவது நடுவரிடம் பரிந்துரைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?//

நான் MCC விதிகள் துணைக் குழுவில் உள்ளேன், எனவே அகல-பந்து விதியை விரிவுபடுத்தும் இந்த நிலைக்கு நாங்கள் எப்படி வந்தோம் என்பது பற்றி எனக்கு தெளிவான விளக்கம் கிடைத்துள்ளது. பந்து வீச்சாளர் ஓடி வரும் போது மட்டையாளர் தனது நிலையை மாற்றப் போகிறார் என்றால், அது அகல-பந்து இல்லை என்பதன் மூலம், பந்து வீச்சாளருக்காக இன்னும் கொஞ்சம் Latitude வழங்க முயற்சித்தோம். நடுவருக்கு மட்டையாளர் தன் நிலையை மாற்றுவது குறித்து நல்ல தெளிவு இருக்கிறது.

இதைப் பற்றிய எனது பார்வை உண்மையில் பெரிதாக மாறவில்லை. தொடர்ந்து நடுவரின் திறன் மற்றும் தீர்ப்பு தொழில்நுட்பத்தின் அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும் போது நான் எப்போதும் கவலைப்படுவேன். மக்கள், தவறாக தீர்ப்பு வழங்கப்படுதலை தீர்ப்பதற்கான வழி தொழில்நுட்பத்திற்கு மாறுவது என்று நினைக்கிறார்கள். ஒரு நடுவரின் திறமையும், தீர்ப்பும் தொழில்நுட்பம் மூலம் அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதை நான் தொடர்ந்து பார்க்கிறேன். நடுவர்களும் ஒரு வீரரைப் போல நீங்கள் செய்வதை நன்றாக செய்கிறீர்கள், மேலும் நீங்கள் மிகக் குறைவான தவறுகளைச் செய்கிறீர்கள் என்று படிநிலைகள் வாயிலாக முன்னேறுகிறார்கள். எப்படித் தோன்றினாலும், தீர்ப்பு வழங்குவதில் அதிகாரம் செலுத்தும் கலையை ஒரு அறிவியலாக மாற்றவும் தேர்த்தியைத் தேடவும் முயற்சிப்பதில் நான் மிகவும் விழிப்புடன் இருக்கிறேன். எனவே அகல-பந்துகளை பொறுத்தவரை, உதாரணமாக, நாங்கள் ஒரு அகல-பந்து தீர்ப்பை எடுக்கப் போகிறோம் மற்றும் அதை மூன்றாம் நடுவர் தீர்மானிக்க அவர்களிடம் தூக்கி எறிய போகிறோம்.

அகல-பந்து என்றால் என்ன என்று வரையறுப்பது எப்படி? ஏனெனில்





அகல-பந்துகள், எடுத்துக்காட்டாக, நீங்கள் இன்னும் பார்க்க வேண்டும்: மட்டையாளர் ஒரு ஷாட்டை விளையாடியிருக்க முடியுமா? மட்டையாளர் பந்தை போதுமான அளவுக்கு எட்டக்கூடியதாக துடுப்பை கொண்டு வந்தாரா? அந்த வரையறைகள் மூலம் நீங்கள் நடுவர்களை அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாக்குகிறீர்கள். நிச்சயமாக, பந்து மட்டையிலோ (Bat) அல்லது திண்டையிலோ (Pad) பட்டிருக்கும் போது, நடுவர் அகல-பந்து என்று தீர்மானித்தால் - அது தெளிவாகத் தவறு. ஆனால் இது எங்கே போய் முடியுமோ என்று நான் கவலைப்படுகிறேன்.

நடுவர் செய்யும் அனைத்து முடிவும் மறுஆய்வு முறைமையின் (DRS) கீழ் வர வாய்ப்பிருக்கிறதா? ஒரு நடுவர் பிழை செய்யும் போதெல்லாம் - நிச்சயமாக தவறு செய்கிறார் என்று நான் சொல்ல மாட்டேன், ஆனால் யாரேனும் ஒருவர் நடுவர் தவறு செய்துவிட்டார் என்று நினைக்கிறார் - எங்களிடம் தொழில்நுட்பம் உள்ளது, அதை நாம் பயன்படுத்த வேண்டும் என்ற வாதம் இருப்பதாக தெரிகிறது. எங்கள் விளையாட்டு அந்த வழியில் செல்வதை நான் வெறுக்கிறேன், ஏனெனில் களத்தில் உள்ள ஒவ்வொரு முடிவையும் மூன்றாவது நடுவரிடம் நாங்கள் தூக்கி எறிந்து விடுவோம் என்ற நிலைக்கு வந்து விடுவோம்.

இந்த மறுஆய்வுகள் அனைத்தும் எவ்வளவு நேரம் எடுக்கும்? கடந்த ஆண்டு மறைந்த ஷேன் வார்ன் போன்ற சில வர்ணனையாளர்கள், திட்டமிட்ட முடிவு நேரத்தை கடந்து சில நிமிடங்களுக்கு பின் எப்படி ஒரு ODI முடியலாம் என்று புகார் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. நீங்கள் விரைவாக விளையாட முடியாது மற்றும் ஒவ்வொரு பந்தையும் மறுஆய்வு செய்ய முடியாது - எப்போதும் ஒரு வணிகம் இருக்கும்.

//அகல-பந்து போன்ற ஒன்றின் மூலம், தவறான முடிவைத் திருத்தும் சாத்தியம் இருப்பதாக நான் நினைக்கிறேன்?//

உள் விளிம்புக்கு (inside edge), அது லெக்-பை என்று உதிரி ரன் வழங்கப்படும் போது, ஒரு மட்டையாளர் 99 ரன்களில் வெளியேறினால் என்ன செய்வது? “நாம் ஏன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மட்டையாளரின் ஓட்டப்பெறுதியை சரி செய்யவும்






அவர்களுக்கு உரிய ஒவ்வொரு ஓட்டங்களையும் அவர்கள் பெறுவதை உறுதி செய்யவும் கூடாது?" என்று அவர்கள்(சிலர்) சொல்லப் போகிறார்கள்.

//அகல-பந்து விடயத்தில், நீங்கள் கூடுதல் மறுஆய்வைக் கேட்கவில்லை. அணி, அதை நியாயமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில், அவர்களிடம் இரண்டு தடவை மட்டுமே மறுஆய்வு செய்யும் வாய்ப்புகள் உள்ளன - இதனை அகல-பந்துக்கு பயன்படுத்த வேண்டுமா அல்லது நோ-போல் ஆக இருக்கும் இடுப்பு உயர பந்து வீச்சுக்கு பயன்படுத்த வேண்டுமா என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.//

நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன், ஆனால் leg-side அகல-பந்து என்றால் என்ன என்பதை இப்போது உங்களால் வரையறுக்க முடியுமா? மூன்றாவது நடுவராக களத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை நீங்கள் புறக்கணிக்க முடியுமா? லெக் சைட், ஆ·.ப் சைட் அகல-பந்து, மற்றும் உயரத்திற்கான நோ-போல் (No-ball) என்பவற்றை மாற்றுவதற்கான உறுதியான ஆதாரம் என்ன என்பதை உங்களால் எனக்கு தெளிவாக வரையறுக்க முடியுமா?

//இந்த மாதிரியான விடயங்களுக்கான வரையறைகள் விளையாடும் நிபந்தனைகளில் வரையறுக்கப்பட வேண்டுமா?//

ஆனால் வரையறை என்பது ஓரளவு இணக்கமற்ற மற்றும் கருத்து அடிப்படையிலானது. எனவே, எடுத்துக்காட்டாக, ஒரு மட்டையாளரின் தலைக்கு மேல் செல்லும் பந்திற்கு அவர் குனியும் போது, நடுவர் அவர்களின் துடுப்பாட்ட நிலைக்கும், நிமிர்ந்து நிற்பதற்கும் அவர்களின் தலை எங்கிருக்கும் என்பதை அறிந்து , பின்னர் அதை அகல-பந்தாக அழைக்க வேண்டுமா? அல்லது ஓவருக்கு ஒன்று என்று அதை அப்படியே விட்டுவிடலாமா? தீர்மானிக்க வேண்டும்.

தலையின் உயரத்திற்கு மேல் என்று உறுதியாகக் கூறுவதற்கு நாம் அவர்களுக்கு என்ன கருவிகளைக் கொடுக்கப் போகிறோம்? நாம் இப்போது மட்டையாளர், அவர் நிற்கும் நிலைக்கு, ஒரு கட்டத்தை வரையறுக்க போகிறோமா? மற்றும், பின்னர் அந்த குறிப்பிட்ட





மட்டையாளர்க்கு, குறிப்பிட்ட பந்து வீச்சுக்கு, குறிப்பிட்ட நிலைக்கான உயரம், லெக் சைட் மற்றும் ஆ·.ப் சைட் ஆகியவற்றை தெளிவாக வரையறுக்கப் போகிறோமா? அதைத்தானே செய்ய விரும்புகிறோம்? ஏனென்றால், ஒரு அகல-பந்து மறுஆய்வை உறுதியாக மாற்ற நாம் அதைச் செய்ய வேண்டும். இது நிறைய வேலை மற்றும் நிறைய கட்டமைப்பை உருவாக்கப் போகிறது.

இதிலுள்ள சிக்கல் என்னவெனில், நீங்கள் விளையாடும் நிபந்தனைகளை உருவாக்க விரும்பினால் அல்லது நீங்கள் தொழில்நுட்பத்தை பயன் படுத்த போகிறீர்கள் என்றால், ஒவ்வொரு முறையும் ஒரு புதிய குட்டையான, உயரமான, நடுத்தர அளவிலான மட்டையாளர் வரும் போது, நாங்கள் லெக்-சைட் அகல-பந்து இங்கே, ஆ·.ப்-சைட் அகல-பந்து இங்கே, உயர அகல-பந்து இங்கே என்று மூன்றாவது நடுவர் சொல்ல கட்டமைப்பை வைத்திருக்க வேண்டும். அதை நமக்காக யார் செய்யப் போகிறார்கள்?

//மேலும் இடுப்புக்கு மேல் வழங்கும் நோ-பால்களிலும் இதுவே இருக்க போகிறது.//

ஒவ்வொரு முறையும் ஒரு புதிய மட்டையாளர் மட்டை வீச வரும்போது, இடுப்பின் வரையறை என்ன என்பதை MCC வழங்கும் விதிமுறைகளின் அடிப்படையில், அவர்களின் இடுப்பு உயரம் இருக்கும் இடத்தில் ஒரு கோடு வரையப்பட வேண்டும். இது போப்பிங் கிரீஸ ில் (Popping Crease) நடக்கப் போகிறது. அவர்கள் போப்பிங் கிரீஸுக்கு முன்னால் பந்தை இடைமறித்து விட்டால், பந்து-கண்காணிப்பு துல்லியமாக இருக்க வேண்டும், அது பாப்பிங் கிரீஸுக்கு வரும்போது பந்தின் நிலையைக் காண்பிக்கும். இங்கே மீண்டும் நீங்கள் பந்து கண்காணிப்பு தொழில்நுட்பம் துல்லியமாக இருக்க வேண்டும். தற்போது, பந்து தாக்கும் ஸ்டம்புகளுக்கான உயரத்திற்கு “நடுவரின் அழைப்பு” விலக்கு எங்களிடம் உள்ளது. எனவே, இடுப்புக்கு மேல் உயரமான நோ-பந்திற்கு நடுவரின் அழைப்பு விலக்கு உள்ளதா?, அது எப்படி இருக்கும்? அதன்பின்னர், போப்பிங் க்ரீஸில் பந்து-கண்காணிப்பை துல்லியமாகத் தீர்மானிக்கப் போகிறோம், மேலும் அந்த மட்டையாளர் கிரீஸில் நிமிர்ந்து நிற்கிறார் என்பதையும்



உறுதிப்படுத்திக் கொள்ளப் போகிறோம் - கீழே குனிந்து நிற்காமல் அல்லது அவர்களின் கிரீஸிலிருந்து வெளியேறாமல், ஆனால் அந்த குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் நின்ற இடத்திலே, நிமிர்ந்து நின்றார்கள்.


எனவே பல விவரங்கள் உள்ளன. ஒன்று, உயரத்தை நிர்ணயம் செய்வதற்கும், இரண்டு, எது முடிவானது என்பதை முயற்சி செய்து முடிவு செய்வதற்கும், மூன்று, மூன்றாவது நடுவர்களுக்கு எப்போது முடிவை மாற்றுவது அல்லது மாற்றாமல் இருக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலையும் விளக்கத்தையும் வழங்க வேண்டிய தேவை உள்ளது. மீண்டும், நாங்கள் போட்டி நடுவர்களிடமிருந்து (on-field umpires) மற்றொரு முடிவை எடுத்து, மறுஆய்வு செய்து ஆட்டத்தை மெதுவாக்குகிறோம்.

***மிகுதி அடுத்த இதழில்.....***

# மருத்துவ உதவிகள்

அன்பானவர்களே!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மூன்றாம் கட்டமாக இரண்டு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான Erythropoietin injection அன்பளிப்பாக வழங்கப்பட்டன. ஏற்கனவே சுமார் மூன்று லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான மருந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மொத்தமாக ஆறு லட்சம் பெறுமதியான மருந்துகள் வழங்கிய இந்த பெரும்பணிக்கு உதவிய நல்லுள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகள். நான்காம் கட்டமாக மேலும் சில அத்தியாவசியமான மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்ய நிதியுதவி கோரி அன்புரிமையோடு தூமி அழைக்கிறது.



போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
TEACHING HOSPITAL JAFFNA
SRI LANKA
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். Hospital Road, Jaffna.
021 222 2261, 021 222 3348, 021 222 2301-3 | 021 222 2262 | thjaffna@gmail.com
My No: GA/Donation/2022 | Your No: | Date: 17.06.2022

The President,
Thumi Foundation,
No 154/2, Navalar Road,
Jaffna.

Dear Sir/Madam,

Acknowledgement Letter

We wish to thank you for your donation to our Hospital, which we received on 13th and 15th of May 2022. This donation will help us to expand our services in this Hospital for better patient care services.

- Injection Erythropoiten 4000 IU PF.Syr – 50 Nos
- Injection Erythropoiten 2000 IU PF.Syr – 30 Nos

We greatly appreciate your support and hope you will extend your service in future also.

Thanking you.

Director.

Copy to : 1.Accountant – TH Jafffna – f.i.n.a
2.Chief Pharmacist – TH Jaffna- f.i.n.a

பணிப்பாளர் DIRECTOR : 021 222 2260 | பிரதிப் பணிப்பாளர் II DEPUTY DIRECTOR II : 021 222 5661 | வைத்தியசாலைச் செயலாளர் HOSPITAL SECRETARY : 021 222 7351
பிரதிப் பணிப்பாளர் I : 021 222 2921 | கணக்காளர் : 021 222 3149 | நிர்வாக உத்தியோகத்தர் : 021 222 7764

நன்றி
தூமி அமையம்

